
# குடியரசு தமிழ் வாசகம்

653



OFFICE OF THE REGISTRAR OF BOOKS
26 DEC 1950
MADRAS
653
4-52

வீ. கி. சேஷாத்திரி
பீ.ஏ., எல்.டி.

TB
031,6 N50
N50
139586.

வி. செல்லப்ப சாஸ்திரி & ஸன்ஸ்

# குடியரசு தமிழ் வாசகம்

(நான்காம் புத்தகம்)

நான்காம் வகுப்பு

வீ. கி. சேஷாத்திரி பீ. ஏ., எல்., டி.,
சென்னை கல்வி இலாகா

டி. வி. செல்லப்ப சாஸ்திரி அண்டு ஸன்ஸ்
மதராஸ்

காபிரைட்] [விலை 10 அணா

First Edition November 1950.

TB
031,6(4)
1.050

தமிழ்நாடு ஆவணக்காப்பக நூலகம்
139586
சென்னை-600 008.

T. V. C. Press, Madras.

# முகவுரை


குடியரசு தமிழ் வாசகம் என்னும் இந்நூல் வரிசை தமிழ் நாட்டில் துவக்கப் பள்ளிகளில் பயிலும் சிறுவர் சிறுமியருக்கு உரியது. துவக்கப் பள்ளிகளில் ஒன்று முதல் ஐந்து வகுப்புக்களுக்கு அரசியலார் வெளியிட்டுள்ள பாடதிட்டத்தின்படி இந்நூல் வரிசை எழுதப்பட்டுள்ளது. அந்தந்த நிலையில் குழந்தைகள் தெரிந்து கொள்ள வேண்டிய சொல்லாட்சிப் பெருக்கம் கவனத்தில் இருத்திப் பாடங்கள் இயற்றப்பட்டுள்ளன. மௌன வாசிப்புப் பழக்கம் உண்டாவதற்குத் தேவையான கட்டளைகளும் கதைகளும் சேர்க்கப்பட்டுள்ளன. பாடங்களின் இறுதியில் கடின சொற்களின் பொருள் விளக்கமும், பயிற்சிகளும், வினுக்களும், இலக்கணக் குறிப்புக்களும் சேர்க்கப்பட்டுள்ளன. இந்நூல் வரிசையைத் தமிழுலகம் ஆதரிக்கும் என்று நம்புகிறேன்.

சென்னை
1-11-50

வீ. கி. சேஷாத்திரி

# உள்ளுறை


| எண் | பொருள் | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | இறை வணக்கம் | ... | 1 |
| 2. | நமது நாடு | ... | 2 |
| 3. | மன்னன் மைதாஸ் I | ... | 10 |
| 4. | பருவ காலங்கள் | ... | 17 |
| 5. | கடிகாரம்—கவிமணி | ... | 23 |
| 6. | மேட்டூர் அணை | ... | 25 |
| 7. | சிறுவர் செஞ்சிலுவை | ... | 32 |
| 8. | உடற் பயிற்சி | ... | 38 |
| 9. | தேகப் பயிற்சி-யோகி சுத்தானந்த பாரதியார் | | 45 |
| 10. | மன்னன் மைதாஸ் II | ... | 47 |
| 11. | நீராவி | ... | 52 |
| 12. | கூட்டுறவு | ... | 58 |
| 13. | பெற்ருேரைப் பேணுதல்—வேதநாயகம் பிள்ளை | | 63 |
| 14. | மன்னன் மைதாஸ் III | ... | 66 |
| 15. | நூல் நிலையம் | ... | 74 |
| 16. | முகம்மது நபி | ... | 80 |
| 17. | ஓடிவாடா கண்ணு!-யோகி சுத்தானந்தபாரதியார் | | 86 |
| 18. | தொற்றுநோய் (உரையாடல்) | ... | 89 |
| 19. | அரக்கு மாளிகை | ... | 96 |
| 20. | என்கதை (கங்கை நதி) | ... | 102 |
| 21. | ஊருக்கு நல்லது—சுப்ரமணிய பாரதியார் | | 111 |
| 22. | பேராசையின் விளைவு (ஒரு சிறு நாடகம்) | | 113 |
| 23. | செய்யுள் பாடம் | ... | 122 |
| 24. | நாட்டு வணக்கம்—நாமக்கல் கவிஞர் | ... | 129 |



கடவுள் வணக்கம்.

# 1. இறைவணக்கம்

| | | | |
|---|---|---|---|
| திருவடி | வண்ணம் | புகழ் | பெருமான் |
| மால் | சக்தி | குன்றுது | திண்ணம் |
| நிதி | மேனி | புவியீர் | வானோர் |
| திகழும் | ஒளி | பெருமை | அழியா |

1. கண்ணன் திருவடி எண்ணுக மனமே
திண்ணம் அழியா வண்ணம் தருமே.

2. தருமே நிதியும் பெருமை புகழும்
கருமா மேனிப் பெருமான் இங்கே.

3. தவறுது உணர்வீர் புவியீர் மாலும்
சிவனும் வானோர் எவரும் ஒன்றே.

4. ஒன்றே பலவாய் நின்றோர் சக்தி
என்றும் திகழும் குன்று வொளியே!

1. அரும்பொருள் :- திருவடி - பாதம். திண்ணம் - நிச்சயம். வண்ணம் — நன்மை. நிதி - செல்வம். மேனி - உடல். புவியீர் - உலகீர். மால் - திருமால், மகாவிஷ்ணு. வானோர் - தேவர்கள். திகழும் - விளங்கும். குன்று - குறையாத. ஒளி - பிரகாசம்.

2. கேள்விகள் :-

1. கண்ணனை எண்ணினால் கிடைக்கும் நன்மைகள் யாவை ?

2. உலகமக்கள் தெரிந்து கொள்ளவேண்டியது என்ன ?

3. பயிற்சி.

1. திண்ணம், திருவடி, நிதி, புவி, வானோர் - இவற்றை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுது.


2. எதிர்ப்பதங்களை எழுது - பெருமை, புகழ், இங்கே, ஒன்று.

## 2. நமது நாடு

| | | |
|---|---|---|
| **முத்தமிழ்** | **சற்றேறக்குறைய** | **உறைபனி** |
| **கவிஞர்** | **முன்னையர்** | **வாய்ந்தது** |
| **சிகரம்** | **பல்லாயிரம்** | **வானையளாவி** |
| **அரண்** | **உறைவிடம்** | **வசதி** |
| **உற்பத்தி** | **ஆண்மை** | **அறப்போர்** |
| **சுரங்கம்** | **எய்தி** | **வன்மை** |
| **வளமை** | **யதேச்சையாக** | **சான்று** |
| **அமைதி** | **நள்ளிரவு** | **நனி** |

"இந்திய நாடிது என்னுடை நாடு"
என்று தினந்தினம் நீயதைப் பாடு.
'முத்தமிழ் நாடெந்தன் முன்னையர் நாடு
முற்றிலும் சொந்தம் எனக்கெனப்பாடு'

1. இந்தியாவிலேயே நாம் பிறந்தோம்; இங்கேயே நாம் வளர்ந்தோம்; இந் நாட்டி


இந்துகுஷ்
ஆப்கானிஸ்தானம்
திபெத்
இந்துஸ்தான சமவெளி
இமய மலை
விந்தியமலை
தக்ஷிண
பீடபூமி
அரபிக்
கடல்
வங்காள
விரிகுடா
இந்து மஹா
சமுத்திரம்

லேயே நாம் வாழ்ந்து வருகிறோம். இந்தியா நமது சொந்த நாடு. இதற்குப் பரதகண்டம் என்றொரு பெயரும் உண்டு. பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன் இந்நாட்டைப் பரதன் என்றொரு சக்கரவர்த்தி ஆட்சி புரிந்தமையால், இந்நாட்டிற்கு இப்பெயர் உண்டாயிற்று.

2. இந்தியா ஒரு பெரிய நாடு; சீரும் சிறப்பும் வாய்ந்தது; பழமையும் பெருமையும் ஒருங்கே அமையப் பெற்றது; நீர் வளமும் நிலவளமும் மிகுந்துள்ளது. இந்நாட்டில் சற்றேறக்குறைய நாற்பது கோடி மக்கள் வாழ்ந்து வருகிறார்கள். உலகத்தில் வாழும் மக்களில் ஐந்தில் ஒரு பகுதியினர் இந்நாட்டில் வாழ்கின்றனர்.

3. இந்த நாட்டிற்கு வடக்கே மிகவும் உயரமான இமயமலை இருக்கிறது; தெற்கே குமரிமுனையும் இந்து மகாசமுத்திரமும் உள்ளன; கிழக்கிலும் மேற்கிலும் முறையே வங்காளக் குடாக்கடலும் அரபிக்கடலும் சூழ்ந்துள்ளன. இமயமலையும் கடல்களும் இந்தியாவிற்கு இயற்கை அரண்களாக அமைந்துள்ளன.

4. உலகிலுள்ள மலைகள் யாவற்றிலும் பெரியது இமயமலையே ஆகும். இமாலயத்தை ஒருவரும் எளிதில் கடக்க முடியாது. இம்

மலையின் மீது எப்பொழுதும் உறைபனி மூடி இருக்கும். இதன் சிகரங்கள் வானை யளாவி நிற்கின்றன. கவிஞர்கள் இதை 'வெள்ளிப் பனிமலை' என்ப் புகழ்ந்துள் ளார்கள். இமாலயம் சிவ பெருமான் உறை விடம் என்று கருதப்படுகிறது; இதன் கண்ணே பல யோகிகளும் முனிவர்களும் வாழ்ந்து வருகிறார்கள் என்று இன்றும் நம்பப் பட்டு வருகிறது.

5. விந்தியமலை இந் நாட்டை இரு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கின்றது. விந்தியமலைக்கும் இமயமலைக்கும் இடையில் உள்ள பூமிக்கு இந்துஸ்தானம் என்பது பெயர்; விந்திய மலைக்குத் தெற்கிலுள்ள பகுதி தக்காணம். தக்காணத்தின் தென்பகுதி தமிழகம்.

6. 'பாரத நாடு பழம் பெரு நாடு.' இயற்கைச் செல்வமும் வாழ்க்கை வசதிகளும் இந் நாட்டில் ஏராளமாக உள்ளன. வளமை மிக்க இந் நாட்டைப் பலர் பண்டை நாள் முதல் நாடி வந்துள்ளனர். இந்துஸ் தானத்தைச் சிந்து, கங்கை, பிரமபுத்திரா என்ற ஜீவ நதிகள் வளம் செய்கின்றன. இந் நதிகள் இமயமலையில் உற்பத்தியாகின்றன. தக்காணத்திலும் கிருஷ்ணை, கோதாவரி, காவிரி முத லான பல நதிகள் உள்ளன. தக்காணத்தில்

இரு கடற்கரை யோரங்களிலும் கிழக்குத் தொடர்ச்சி மலையும் மேற்குத் தொடர்ச்சி மலையும் அமைந்துள்ளன.

7. இந்தியாவிலுள்ள மலைகளும், நதிகளும், காடுகளும், சோலைகளும் இயற்கைச் செல்வங்கள் ஆகும். சமவெளிகளில் நெல், கோதுமை முதலான உணவுப் பொருள்கள் ஏராளமாக விளைகின்றன; பல விடங்களில் சுரங்கங்களில் பொன்னும் மணியும் கிடைக்கின்றன; காடுகளில் பலவகை மிருகங்களும், பறவைகளும் யதேச்சையாக உலவி வருகின்றன. இந்தியா பண்டை நாள் முதல் சீரும் சிறப்பும் நாகரிகமும் பெற்றுள்ளது. நம் நாட்டினர் அறிவிலும், ஆண்மையிலும், புகழிலும், கல்வியிலும் சிறப்பு எய்தி யுள்ளனர். நமது முன்னோர்களுடைய நாகரிகத்திற்கும் பரந்த அறிவுக்கும் நமது பண்டை நூல்களே ஏற்ற சான்றுகளாக உள்ளன.

8. நமது நாட்டு மக்களில் பெரும்பாலோர் இந்து மதத்தினர்; இஸ்லாமிய மதத்தினரும், கிறிஸ்தவ மதத்தினரும், இன்னும் பல்வேறு மதத்தினரும் இங்குள்ளனர். நம்மிடையில் பல மொழிகள் வழங்கி வருகின்றன; தக்காணத்தில் தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், மராட்டி முதலிய

மொழிகளும், இந்துஸ்தானத்தில் இந்தி, உருது, வங்காளி, குஜராத்தி முதலிய மொழிகளும் பேசப்படுகின்றன. தென்னாட்டிலுள்ள நமக்குத் தமிழ் மொழியே தாய் மொழி ஆகும்.

9. நாம் இது வரையில் பல நாட்டினர்க்குப் பல காலங்களில் அடிமைப்பட்டுக் கிடந்தோம். அடிமை வாழ்வில் அமைதி ஏது? அடிமைகளுக்குச் சுதந்தரம் ஏது? கிளியைத் தங்கக் கூண்டில் வைத்து வளர்த்தாலும், அதற்கு அமைதி உண்டாகுமா? அது போலவே நாமும் சுதந்தரம் கோரிப் பல ஆண்டுகள் போர் புரிந்தோம். அது ஒரு அறப்போர்; 'கத்தியின்றி ரத்தமின்றி' நடை பெற்றபோர். அப்போரில் பலர் கலந்து கொண்டனர். மகாத்மா காந்தியும் மற்றும் பல பெரியார்களும் நமது தலைவர்களாக அப்போரில் விளங்கினார்கள். அப்போரின் வன்மையைக் கண்ட ஆங்கில அரசியலார் பதை பதைத்தார்கள்; சினம் கொண்டார்கள். சுதந்தரப் போர்வீரரில் பலரைச் சுட்டு வீழ்த்தினார்கள்; பலரைச் சிறை செய்தார்கள்; பலரை அவமானம் செய்தார்கள். ஆயினும் சுதந்தர வேகத்தை அவர்களால் அடக்க முடியவில்லை. இறுதியில், ஆங்கிலே

யர் நமது நாட்டை நமக்கே அளித்தார்கள். 1947 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 14 ஆம் தேதி நள்ளிரவில் இந்நாட்டின் ஆட்சியை மனிதருள் மாணிக்கம் போன்ற பண்டித ஜவஹரிடம் அளித்தார்கள். அன்று முதல் நாம் சுதந்தர மக்களாகத் தலை நிமிர்ந்து உலக மக்களிடையே திகழ்கின்றோம்.

10. பண்டை நாட்களில் நாம் உலகெங்கும் புகழும் பெருமையும் பெற்றிருந்தோம். நமது முன்னோர்கள் கடல் கடந்தும் வர்த்தகம் செய்து வந்தனர். ஆனால் நடுவில் பல நூற்றாண்டுகள் சிறுமை பெற்றிருந்தோம்; இப்பொழுது மீண்டும் பெருமை பெறக் காத்திருக்கிறோம். ஆனால் பெருமை உழைப்பின் பயனாகவே உண்டாக வேண்டும். நாட்டு மக்கள் தளராமல் உழைக்க வேண்டும். கைத்தொழில் பெருகவேண்டும்; விவசாயம் தழைக்க வேண்டும்; கல்வியும் கலைகளும் பெருக வேண்டும்; மக்களின் வாழ்க்கை நிலை உயரவேண்டும்; நாட்டு மக்கள் ஒற்றுமையாக வாழ வேண்டும். நாம் பல மதங்களைத் தழுவிய போதிலும் யாவரும் இந்தியரே; இந்தியத் தாயின் புதல்வர்களே. 'ஒன்றுபட்டாலுண்டு வாழ்வே, நம்மில் ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வே' என்றபடி

நமக்குள்ளே 'எல்லோரும் ஓர்குலம், எல்லோரும் ஓரினம், எல்லோரும் இந்திய மக்கள்' என்ற ஒற்றுமை உணர்ச்சி உண்டாக வேண்டும்.

"பெற்ற தாயும் பிறந்த பொன்னுடும்
நற்றவ வானினும் நனி சிறந்தனவே"

1. அரும்பொருள் :- முன்னையர் - முன்னோர். வசதி - சௌகரியம். வளமை - செழிப்பு. வாய்ந்தது - பெற்றுள்ளது. யதேச்சையாக - சுதந்தரமாக. அரண் - கோட்டை. ஆண்மை - தைரியம். சான்று - சாட்சி. உறைவிடம் - வாழும் இடம். வன்மை - பலத்துடன். நனி - மிகவும்.

2. கேள்விகள் :-
   1. நம் நாட்டிற்குப் பரத கண்டம் என்று ஏன் பெயர் வந்தது ?
   2. நமது நாட்டிற்கு இயற்கை அரண்கள் யாவை?
   3. இமாலயம் எப்படிப்பட்ட மலை ?
   4. இந்தியாவில் பாயும் நதிகள் யாவை ?
   5. நமது நாட்டில் வழங்கும் மொழிகள் யாவை ?
   6. நமக்கு எப்படிச் சுதந்தரம் கிடைத்தது ?
   7. நாம் என்று சுதந்தரம் அடைந்தோம் ?
   8. நமது நாட்டுக்கு நாம் செய்யவேண்டிய கடமை என்ன ?

3. பயிற்சி.
   1. எதிர்ப்பதங்களை எழுது : இயற்கை, ஒற்றுமை, நள்ளிரவு, அடிமை வாழ்வு, பிறத்தல்.
   2. பல்லாயிரம், நூற்றுண்டு, சீரும் சிறப்பும், சற்றேறக் குறைய, வானையளாவி, அமைதி -

இவற்றைச் சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுது.

3. நமது நாட்டின் பெருமையைப் பற்றிப் பத்து வரிகள் எழுது.

4. இலக்கணம் : வாக்கியம் – உலகிலுள்ள மலைகள் யாவற்றிலும் பெரியது இமயமலை. இது ஒரு வாக்கியம். இது ஒரு முற்றுப்பெற்ற கருத்தைத் தெரிவிக்கிறது. இதேபோல் பல சொற்கள் சேர்ந்து ஒரு முற்றுப்பெற்ற கருத்தைத் தெரிவிப்பதற்கு வாக்கியம் என்பது பெயர். ஒவ்வொரு வாக்கியத்தின் முடிவிலும் ஒரு முற்றுப்புள்ளி (.) வைக்கவேண்டும். வாக்கியத்திலுள்ள சொற்கள் பொருள் விளங்கும்படி சரியான வரிசையில் அமைந்திருக்க வேண்டும்.

## 3. மன்னன் மைதாஸ் I

| | | |
|---|---|---|
| **மன்னன்** | **மலர்வனம்** | **இடையருது** |
| **துயரம்** | **நுகர்ந்து** | **எழில்** |
| **சகியான்** | **சேகரிக்க** | **வாலிபன்** |
| **செல்வம்** | **புகன்ருன்** | **ஐயம்** |
| **படைத்தவன்** | **கோரிக்கை** | **விளித்து** |
| **வியப்பு** | **அறிவாளி** | **மீண்டும்** |

1. முன்னொரு காலத்தில் ஒரு நாட்டை மைதாஸ் என்ற மன்னன் ஆண்டு வந்தான். அவனுக்கு அழகிற் சிறந்த ஒரு மகள் இருந்தாள். அவள் பெயர் பொன்மேனி, மன்னன் மைதாஸ் பொன்மேனியை மிகப் பிரியமாக

வளர்த்து வந்தான். அவள் எப்பொழுதும் ஆனந்தமாக இருப்பதையே அவன் விரும்பி ஞன். அவள் துயரைக் காணச் சகியான். பொன்மேனியுடன் கூடவே உணவு கொள்ளுவான். பொன்மேனிக்கு மலர்கள் என்ருல் அதிக ஆசை; ஆதலால் மைதாஸ் அவளுக்கென்று தனியாக ஒரு மலர் வனத்தை அமைத்தான். தினந்தோறும் காலையிலும் மாலையிலும் மன்னனும் மகளும் மலர்வனத்தைச்சுற்றி வந்து, மலர்களின் அழகைக் கண்டும், மணத்தை நுகர்ந்தும் ஆனந்திப்பது வழக்கம்.

2. ஆனல் மன்னன் பேராசை பிடித்தவன். பொன் என்ருல் அவனுக்கு உயிர். தான் இறப்பதற்குள் ஏராளமான தங்கக் கட்டிகளைச் சேகரிக்க வேண்டுமென்று அவன் பெரிதும் விரும்பினன். மலர் வனத்திலுள்ள பூக்களும் காய்கனிகளும் பொன்ஞக இருக்கக்கூடாதா என எண்ணி வருந்துவான். பொன்மேனியிடம் இருந்த அன்பைக்காட்டிலும் அவனுக்குப் பொன்மேல் ஆசை அதிகமாயிற்று. அதன் பயனக அவனுக்குப் பொன் பித்துப் பிடித்து விட்டது! 'பொன்னைப் பார்த்து மகிழவேண்டும்; பொன்னைத் தொட்டு மகிழவேண்டும்; பொன்னைச் சேக

ரித்து மகிழவேண்டும்’ என்று மைதாஸ் இடையருது எண்ணமிடலானுன். இதன் பயனுக அவன் அரசை மறந்தான்; குடிமக்களை மறந்தான்; தன் அருமை மகள் பொன் மேனியை மறந்தான்; இயற்கையின் எழிலை மறந்தான். உணவும் உடையும் அவனுக்குத் துன்பமளித்தன; பாட்டும் கூத்தும் அவன் மனதைக் கவரவில்லை; பூக்களின் மணமும் அழகும் அவனுக்கு வெறுப்பை விளைவித்தன; எந்நேரமும் பணக்குவியலுக்கிடையே தன் சுரங்க அறையில் அமர்ந்து காலம் கழித்து வந்தான்.

3. அவ்வறையிலுள்ள பொற்குவியல்களைப் பார்த்துப்பார்த்து மகிழ்வான்; அவற்றைத் தொட்டு இன்புறுவான்; அவற்றைத் அடுக்கிப் பார்த்து ஆனந்த மடைவான். ஏராளமான பொற்குவியல்களைச் சேகரித்தும் அவன் மனம் அமைதி பெறவில்லை. மேன்மேலும் பொன்னை விரும்பிய வண்ணமாகவே மைதாஸ் இருந்தான்.

4. ஒரு நாள் மைதாஸ் தன்னுடைய சுரங்க அறையில் அமர்ந்து பொன் சேர்க்கும் வழிகளைப் பற்றி எண்ணமிட்டுக் கொண்டிருந்தான். கதவு தாளிடப்பட்டு இருந்தது. அச்சமயம் பொற்குவியல்களின் மீது ஒரு

நிழல் விழுந்ததை மைதாஸ் கண்டான். அது யாதென்று அறியத்திரும்பிப் பார்த்தான். நகைமுகத்துடன் ஒரு அழகான வாலிபன் அறையில் நிற்பதை மைதாஸ் கண்டான்.

5. வாலிபன் அவ்வறையைச் சுற்றிப் பார்த்தான். பின்பு அரசனைப் பார்த்து,



"நண்பா! நீ மிகுந்த செல்வம் படைத்தவன். உன்னிடம் உள்ள செல்வத்தைப் போல் இவ்வுலகில் வேருெருவரிடமும் இராது என்று நினைக்கிறேன்" என்ருன். "ஆம், ஆம், சிறிது பொருள் சேகரித்திருக்கிறேன்; ஆனல் அது போதாது என்று எண்ணுகிறேன்" என்று மைதாஸ் பதிலளித்தான்.

6. அம்மொழிகளைக் கேட்ட வாலிபன் வியப்புடன், "என்ன! உனக்கு இவ்வளவு

பொன்னிருந்தும் திருப்தி உண்டாக வில்லை யா?'' என, மைதாஸ் சற்றும் தாமதமின்றி, "இல்லை" என்று மறுமொழி புகன்றான். வாலிபன் மன்னனை அன்புடன் நோக்கினான். "அரசே! உன்விருப்பத்தை என்னிடம் தெரிவி. உனக்குத் திருப்தி எப்போது உண்டாகும்?" என்று வாலிபன் மன்னனைக் கேட்டான்.

7. மைதாஸ், "ஐயா! பொருள் தேடித் தேடி நான் களைத்துப்போனேன். ஆயினும் என்னாசை நீங்கவில்லை. நான் தொடும் பொருள்கள் யாவும் பொன்னாக மாறினால் நலமாயிருக்கும்" என்றான். அது கேட்ட வாலிபன், "உன் கோரிக்கை யிலிருந்தே நீ சிறந்த அறிவாளி என்று தெரிகிறது. ஆனால் நீ தொட்டதெல்லாம் பொன்னாக மாறினால் உனக்குத் திருப்தி உண்டாகுமா? யோசித்துச் சொல்" என்று கேட்டான். மைதாஸ், "இதில் ஐயம் ஏன்? அச் சக்தியை நான் பெற்றால் பெருமகிழ்ச்சி யடைவேன்," என்றான்.

8. வாலிபன் மீண்டும் "மன்னா! இச்சக்தியை நீ பெற்றால் எக்காலத்திலும் வருத்த மடையாமல் இருப்பாயா?" என்று வினவினான் மைதாஸ் "வருத்தமா? நான் ஏன் வருந்த வேண்டும்? நான் கோரும் சக்தி அது

தானே! என் விருப்பத்தை நிறை வேற்ற வல்லது அதுவேயன்றே!" என்று மறுமொழி புகன்ருன். வாலிபன் உடனே மன்னனை விளித்து, "அவ்வாறே ஆகட்டும்! உன் பிரியப் படியே செய்கிறேன். நாளை அதிகாலையிலிருந்து நீ தொடும் பொருள்கள் யாவும் பொன்னுக மாறிப்போகும்" எனப் புகன்று மறைந்தான்.

1. அரும்பொருள்:- துயரம் - விசனம். நுகர்ந்து-அனுபவித்து. சேகரிக்க - ஒன்று சேர்க்க. இடையருது - ஒய்வு இல்லாமல். எழில் - அழகு. வியப்பு - ஆச்சரியம். ஐயம் - சந்தேகம். விளித்து - பார்த்து. மீண்டும் - மறுபடியும்.

2. கேள்விகள்:-
   1. பொன்மேனியை மைதாஸ் எவ்வாறு வளர்த்து வந்தான்?
   2. மைதாஸ் எதன் மேல் பேராசை கொண்டான்?
   3. அப்பேராசையால் என்ன நேர்ந்தது?
   4. வாலிபன் மன்னனை என்ன கேட்டான்?
   5. மைதாஸ் வாலிபனிடம் என்ன கோரினுன்?

3. பயிற்சி.
   1. வாலிபனுக்கும் மன்னனுக்கும் நடந்த பேச்சு வார்த்தையை ஐந்து வாங்கியங்களில் சுருக்கமாக எழுது.
   2. எதிர்ப் பதங்களை எழுது – துயரம், சகியான், வாலிபன், நண்பன், போதாது.

3. எழில், மலர்வனம், ஐயம், கோரிக்கை - இவற்றைச் சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுது.
4. பின்வரும் சொற்களை வாக்கியங்களாக மாற்றி அமைக்க:
   1. வளர்த்து பொன்மோனியை அன்புடன் மைதாஸ் வந்தான்
   2. மன்னனுக்குப் பிடித்து பித்து பொன் விட்டது
   3. எண்ணமிட்டுக் கொண்டிருந்தான் அறையில் பார்த்து பொற்குவியல்களை மைதாஸ்
   4. பொருள்கள் மாறிப்போகும் பொன்னாக தொடும் நீ நாளை அதிகாலையிலிருந்து
   5. அறிவாளி சிறந்த நீ தெரிகிறது என்று

4. இலக்கணம்.

I. நிறுத்தக் குறிகள்.

1. (,) இது காற்புள்ளி. இதைக் கமா என்றும் சொல்வதுண்டு. இப்புள்ளி வைத்துள்ள இடத்தில் ஒரு மாத்திரை நேரம் நிறுத்த வேண்டும். கண்ணிமைப் பொழுதும் கைந்நொடிப் பொழுதும் ஒரு மாத்திரை நேரம் ஆகும். ஒரு வாக்கியத்திலுள்ள கருத்தைப் பல பிரிவுகளாகப் பிரித்து, ஒவ்வொரு பகுதி முடியும் இடத்திலும் கால் புள்ளி இடுகிறோம்.
2. (?) இது கேள்விக்குறி. வினாவாக்கியங்களின் முடிவில் இக்குறி இடவேண்டும்.
3. (!) இது வியப்புக்குறி. இக்குறி இடப்பட்டுள்ள வாக்கியங்கள் வியப்பு, துன்பம், மகிழ்ச்சி முதலான உணர்ச்சிகளைத் தெரிவிக்கும்.

4. (" ") இவை மேற்கோள் குறிகள். பிறருடைய பேச்சுக்களை அவர்கள் கூறியபடியே எழுதும் போது இக்குறிக்களை இடவேண்டும்.

5. (.) இது முற்றுப்புள்ளி - இக்குறியுள்ள இடத்தில் நான்கு மாத்திரை நேரம் நிறுத்த வேண்டும்.

II. இப்பாடத்தில் கேள்விக்குறியும் வியப்புக் குறியும் வந்துள்ள இடங்களை எடுத்து எழுது.

III. இப்பாடத்திலிருந்து பத்துப் பெயர்ச் சொற்களையும் பத்து வினைச் சொற்களையும் எடுத்து எழுது.

## 4. பருவகாலங்கள்

| | | | |
|---|---|---|---|
| **உட்பிரிவு** | **புலனாகும்** | **கதிரவன்** | **கருமேகம்** |
| **வசந்தகாலம்** | **மாறுதல்** | **பயக்கும்** | **வரவேற்றல்** |
| **வேனிற் காலம்** | **பரவசம்** | **சூழ்நிலை** | **சுவையற்று** |
| **இசை** | **துவங்கினதும்** | **உறைபனி** | **வேற்றுமை** |

1. ஒரு பகலும் ஒரு இரவும் சேர்ந்தது ஒரு நாள் ஆகும். பகற்காலத்தைக் காலை என்றும், மாலை என்றும் பிரித்து வழங்கி வருகிறோம். நாள் பல உட்பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது போல், வருஷமும் நான்கு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது; அவை வசந்தகாலம், வேனிற்காலம், இலையுதிர்காலம், குளிர்காலம் என்பனவாம். தமிழ் நாட்டில் இவற்றை ஆறு பிரிவுகளாகப் பிரித்துள்ளார்கள். அவை கார்காலம், குளிர்காலம், முன்பனிக்காலம், பின்பனிக்

காலம், இளவேனிற்காலம், முதுவேனிற்காலம் என்பன. ஆனால் தமிழ் நாட்டில் பொதுவாக வேனிற்காலமும் குளிர்காலமுந்தான் வெளிப்படையாகத் தெரிகின்றன.

2. மேல் நாடுகளாகிய அமெரிக்காவிலும் ஐரோப்பாவிலும் பருவங்களின் இடையே உள்ள வேற்றுமை நன்கு புலனாகும். ஆதலால் மேல் நாட்டு மக்கள் பருவ காலங்களில் மாறுதல்களை ஆவலுடன் எதிர்நோக்குகிறார்கள். நமது நாட்டில் நாம் அவைகளைப் பற்றிக் கவலை கொள்வதில்லை.

3. வசந்த காலம் கண்களுக்குக் குளிர்ச்சியையும் மனத்திற்கு அமைதியையும் அளிக்கும். நோக்கும் இடமெல்லாம் தரையில் பச்சைப் பட்டாடை விரித்தது போல் பசும் புல் காணப்படும்; மரங்களிலும் செடிகளிலும் பசுமையான இலைகளும், அழகான பூக்களும் பார்க்கப் பார்க்கப் பரவசம் அளிக்கும்; பறவைகள் தங்களுடைய இசையினால் மக்கள் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும்; கதிரவனுடைய வெப்பம் தணிந்து இருக்கும்; அவனுடைய வெளிச்சம் இன்பம் பயப்பதாக இருக்கும்; அவ்வப்பொழுது வானத்திலிருந்து சிறு மழை தூறும்; அதனால் சூழ்நிலை குளிரும். இக் காலத்தில் மக்கள் கூட்டங் கூட்ட

மாக வெளியில் உலவச் சென்று உல்லாச மாகக் காலம் கழிப்பார்கள்.

4. வசந்த காலம் முடிந்து வேனிற் காலம் துவங்கினதும், சூரியனுடைய வெப்பமும் வெளிச்சமும் அதிகம் ஆகும். தாவரங்கள் தழைத்து இனிப்பான கனிகளையும் மணமுள்ள பூக்களையும் கொடுக்கும். இக் காலத்தில் மக்கள் உழைத்து வேலை செய்து பலன் அடைவார்கள்.

5. இலையுதிர் காலத்தில் தாவரங்களிலுள்ள இலைகள் உதிரும்; தானியக் கதிர்கள் முற்றி அறுவடைக்குத் தகுந்தவைகளாக இருக்கும். சூரிய வெப்பமும் வெளிச்சமும் சிறிது சிறிதாகக் குறையும். குளிர்காலத்தில் மக்கள் உறைபனியாலும் குளிராலும் கஷ்டப்படுவார்கள்; சூரிய வெளிச்சம் இராது; தாவரங்கள் பட்டுப்போகும்; மக்கள் இஷ்டம் போல் வெளியில் சென்று உலவிவர முடியாது. இவ்வாறு நால்வகைப் பருவ காலங்களை மேல் நாடுகளில் காணலாம்.

6. பூமியானது தன்னைத்தானே சுற்றிக் கொண்டு சூரியனையும் சுற்றி வருவதால் பருவ காலங்கள் உண்டாகின்றன. தமிழ் நாட்டில் பருவங்கள் ஆறு காணப்படுகின்றன. ஒவ்வொரு பருவமும் இரண்டு மாதங்கள் கொண்

டது. சித்திரையும் வைகாசியும் இள வேனிற் காலம். இக் காலத்தில் வெயிலும்



மழையும் குளிரும் குறைவு; தாவரங்கள் பூத்துக் காய்க்கத் துவங்கும். இக் காலத்தில் நாடெங்கும் விவாகங்களும் உற்சவங்களும் நடைபெறும்.

7. ஆனி, ஆடி மாதங்கள் முதுவேனிற் காலம். இக் காலத்தில் வெயில் கடுமையாக இருக்கும்; புல் பூண்டுகள் கருகிப்போகும்; நீர்நிலைகளில் தண்ணீர் வற்றிப்போகும். இக்காலத்தில் பல விடங்களில் மழை பெய்யும்; இதைக் 'கோடைமழை' என்று சொல்லுவார்கள். இம்மழை பெய்ததும் மக்கள் பயிர்த்தொழில் செய்யத் தொடங்குவார்கள்.

8. ஆவணியும் புரட்டாசியும் கார்கால மாதங்கள். இம்மாதங்களில் வானத்தில் கருமேகங்கள் குவிந்து மழை பெய்யத் தொடங்கும். ஐப்பசி, கார்த்திகை மாதங்களாகிய குளிர்காலத்தில் மழை 'சோ' என்று பெய்யும்; வெப்ப நிலை மிதமாக இருக்கும். மார்கழி, தை மாதங்கள் முன்பனிக்காலம்; இரவின் முற்பகுதியில் பனி அதிகமாகப் பெய்யும். பின்பனிக்காலமாகிய மாசி, பங்குனி மாதங்களில் இரவின் பிற்பகுதியில் பனியும் குளிரும் அதிகமாயிருக்கும்; இக்காலத்தில் தாவரங்களின் இலைகள் உதிரும்.

9. பருவ காலங்களில் சில மக்களுக்கு இன்பத்தையும் சுகத்தையும் அளிக்கின்றன. பருவகாலங்களில் மாறுதல் இராவிடில் வாழ்க்கை சுவையற்றுப் போகும்; காய் கனிவகைகளும் உணவுப் பொருள்களும் உற்பத்தியாகா; இயற்கைக் காட்சிகளில் வேற்றுமைகள் இரா. ஆதலால் உலகிலுள்ள மக்கள் யாவரும் பருவகால வேற்றுமைகளை வரவேற்கின்றனர்.

1. அரும் பொருள் :- புலனாகும் - நன்றாகத் தெரியும். பரவசம் – சந்தோஷம். இசை - பாட்டு. கதிரவன் - சூரியன். சூழ்நிலை - சுற்றுப்புறத்தின் தன்மை. துவங்கினதும் - ஆரம்பித்ததும்.

2. கேள்விகள் :

1. மேல் நாடுகளில் பருவகாலங்கள் என்னென்ன?
2. வசந்தகாலம் எவ்வாறிருக்கும் ?
3. தமிழ் நாட்டில் என்னென்ன பருவகாலங்கள் காணப்படுகின்றன ?
4. கோடை மழை எக்காலத்தில் உண்டாகும் ?
5. பருவகாலங்களால் என்ன உபயோகம் ?

3. பயிற்சி:

1. வெளிப்படை, பரவசம், கருமேகம், உற்சவம்- இச்சொற்களை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுது.

2. சரியாக ஒன்று சேர் :

| | |
|---|---|
| இளவேனிற் காலத்தில் | மழை 'சோ' என்று பெய்யும். |
| முதுவேனிற் காலத்தில் | தாவரங்களின் இலைகள் உதிரும். |
| குளிர் காலத்தில் | தாவரங்கள் பூத்துக்காய்க்கும். |
| கார் காலத்தில் | புல் பூண்டுகள் கருகிப் போகும். |
| முன்பனிக் காலத்தில் | வானத்தில் கருமேகங்கள் குவியும். |
| பின்பனிக் காலத்தில் | இரவின் முற்பகுதியில் பனியும் குளிரும் அதிகம். |

3. எதிர்ப்பதங்களை எழுது - முடிவு, வெப்பம், இன்பம், இரவு.


4. **இலக்கணம் : கீழ்க்காணும் வாக்கியங்களில் கோடுகள் உள்ள இடங்களில் தகுந்த நிறுத்தக் குறிகளை இடு :**

வாலிபன் அரசனை நோக்கி / மன்னா / இச்சக்தியைப் பெற்றால் / நீ எக்காலத்திலும் வருத்தம் அடையாமல் இருப்பாயா / என்றான் / மைதாஸ் / வருத்தமா / நான் ஏன் வருந்தவேண்டும் / நான் கோரும் சக்தி அது தானே என் விருப்பத்தை நிறைவேற்ற வல்லது அதுவேயன்றோ / என மறுமொழி புகன்றான் /

2. இப்பாடத்தில் மூன்றும் பத்தியில் காணப்படும் ஒருமைகளையும் பன்மைகளையும் எடுத்து எழுது.

## 5. கடிகாரம்

| | | | |
|---|---|---|---|
| **செக்கச்சிவந்து** | **சுடர்** | **ஆழி** | **ஆர்க்கும்** |
| **செங்கதிர்** | **இன்னமுது** | **வாசம்** | **சுட்டும்** |
| **மங்கை** | **விளைமணி** | **கமழ்** | **கம்மென** |




சேவற்கோழியுண்டு காகமுண்டு - வானம்
செக்கச் சிவந்து தெரிவதுண்டு;
மேவு பொன்னே! அதிகாலை தெரிந்திட
வெறும் கடிகாரம் வேண்டுமோடி? 1



செங்கதிர் பொங்கி வருவதுண்டு - நல்ல
செந்தா மரைகள் மலர்வதுண்டு;
மங்கையே! காலைப் பொழுதை யுணர்ந்திட
மற்றும் கடிகாரம் வேண்டுமோடி? 2

தன்னிழல் தன்னடி யாவதுண்டு - சுடர்
தானுந் தலைநேர் எழுவதுண்டு;
இன்னமுதே! பகல் உச்சியி தென்றிட
ஏதும் கடிகாரம் வேண்டுமோடி? 3

விண்மணி ஆழியில் வீழ்வதுண்டு-வாசம்
வீசும் மந்தாரை மலர்வதுண்டு;
கண்மணியே! மாலைக் காலம் குறித்திட
கையில் கடிகாரம் வேண்டுமோடி? 4




கம்மென வாசம் கமழ் பாரி சாதமிக்
காவில் மலர்ந்து சொரிவதுண்டு;
அம்மையே! நள்ளிர வீதென்று சொல்லிட
ஆர்க்கும் கடிகாரம் வேண்டுமோடி? 5

சுற்றுப் பொருள் எல்லாம் உற்று நோக்கி -
சுட்டும் மணிநேரம் கண்டறிவாய்; [அவை
பெற்ற முத்தே! இந்த உண்மை அறி
வோர்க்குப்
பின்னும் கடிகாரம் வேண்டுமோடி? 6

—கவிமணி

1. அரும் பொருள் :- செங்கதிர் – சிவந்த கிரணம். சுடர் - நெருப்புப்போன்ற சூரியன். இன்னமுது - இனிக்கும் பால். விண்மணி - ஆகாயத்தில் பிரகாசிக்கும் சூரியன். ஆழி - கடல். கமழ் - வீசும். வாசம் - மணம். ஆர்க்கும் - ஒலிக்கும். சுட்டும் - காட்டும்.

2. கேள்விகள்:-
 1. காலை நேரத்தை எவ்வாறு அறியலாம்?
 2. நண்பகலை எப்படி அறியக்கூடும்?
 3. மாலை நேரத்தை அறிவது எவ்வாறு?
 4. நள்ளிரவு நேரத்தை அறிய ஏன் கடிகாரம் தேவையில்லை?
 5. எந்த உண்மை அறிவோர்க்குக் கடிகாரம் தேவையில்லை?

3. பயிற்சி.

1. எதிர்ச் சொற்களை எழுது – நல்ல, மலர்தல், உண்மை, உண்டு.

2. பின் வரும் சொற்களை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுது ; செக்கச் சிவந்து, சுடர், கம்மென்று, கமழ்.

4. இலக்கணம். இப்பாடலில் வந்துள்ள பெயர்ச் சொற்களையும் வினைச் சொற்களையும் எடுத்து எழுது.

## 6. மேட்டூர் அணை

| | | |
|---|---|---|
| கடல் மட்டம் | தேக்கி | சமீபகாலம் |
| சாகுபடி | நவீனம் | சிற்றூறு |
| பண்டைக் காலம் | விளங்குகிறது | மின்சாரம் |
| நந்தவனம் | இறுதி | நீர்ப்பாசனம் |
| பரப்பு | விசை | நீர்த்தேக்கம் |
| பயனற்று | மதகு | தரிசு |
| ராச்சியம் | நேர்த்தியான | பரவசம் |

1. நம்நாட்டில் பாயும் நதிகளில் காவிரி நதியும் ஒன்றாகும். காவிரி நதி பழமையும் பெருமையும் வாய்ந்தது. இந்த நதி மேற்கு மலைத் தொடரில் குடகு நாட்டில் தோன்றி, மைசூர் நாட்டின் வழியாகப் பாய்ந்து, தமிழ் நாட்டின் பல பகுதிகளில் நுழைந்து, தஞ்சாவூருக்கு அருகிலுள்ள காவிரிப்பூம்பட்டினத்தில்

கடலுடன் கலக்கிறது. இதன் நீளம் சுமார் ஐந்நூறு மைல். இது தோன்றும் இடம் கடல் மட்டத்திலிருந்து ஐயாயிரம் அடி உயரத்தில் இருக்கிறது. இந்நதியில் பவானி, நொய்யல் முதலிய சிற்ருறுகள் வந்து கலக்கின்றன. குடகு நாட்டிலும், தமிழ் நாட்டின் கிழக்குப் பகுதியிலும் பெய்யும் மழை நீர் காவிரியில் கலந்து, இறுதியில் கடலில் சேர்ந்து பயனற்றுப் போவதைத் தடுத்து, நீரைத் தேக்கிவைக்கப் பண்டைக் காலத்திலேயே காவிரி நதியில் பல அணைகளைக் கட்டியுள் ளார்கள்.

2. வயல்களில் தானியங்கள் விளை வதற்கு நீர்ப்பாசன வசதி வேண்டுமல்லவா? சில இடங்களில் கிணறுகள் வெட்டி, அவற்றி லிருந்து ஏற்றத்தின் மூலமாக வயல்களுக்குத் தண்ணீர் பாய்ச்சுகிருர்கள். சில இடங்களில் ஏரிகளின் குறுக்கே மதகுகள் கட்டிக் கால் வாய்களின் வழியாக வயல்களுக்கு நீர் பாய்ச்சு கிருர்கள். ஆற்று நீரைத் தேக்கி வைத்தும் நீர்ப்பாசன வசதி செய்யப்படுவதுண்டு. காவிரி நதியில் கட்டப்பட்டுள்ள அணைகளில் கண்ணம்பாடி அணையே பெரியது ஆகும்; இதற்கு அடுத்தது சமீபகாலத்தில் கட்டி முடித்த மேட்டூர் அணை; இவை தவிர, பெரிய அணை.



மேட்டூர் அணை

மேல் அணை, கல்லணை முதலான சிறு அணை களும் இருக்கிறன.

3. சேலம் நகருக்கு அருகே மேட்டூர் என்று ஒரு சிறு கிராமம் இருந்தது. 1928 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் மேட்டூருக்கு அருகில் காவிரிக்கு ஒரு அணைகட்டத் துவக் கினார்கள். ஆறு ஆண்டுகளில், சுமார் ஏழு கோடி ரூபாய் செலவில், இந்த அணை கட்டி முடிக்கப்பட்டது. இஃது உலகிலுள்ள மிகப்பெரிய அணைகளில் ஒன்றாக இப் பொழுது விளங்குகிறது. காவிரியாற்றின் குறுக்கே ஒரு மைல் நீளத்திற்கு அணைகட்டித் தண்ணீரைத் தேக்கி இருக்கிறார்கள். இந்த அணை ஆற்றின் மணல்மட்டத்திலிருந்து 175 அடி உயரமும், தண்ணீருக்குக்கீழே 39 அடி ஆழமும் உள்ளதாக இருக்கிறது. இச்சுவ ரின் கனம் இருபதரை அடி. இவ்வளவு பெரிய சுவர் காவிரியாற்றின் போக்கைத் தடுப் பதால், அதன் தண்ணீர் ஏறக்குறைய 60 சதுரமைல் பரவிக் கடல்போல் காட்சியளிக் கிறது. இந்நீர்த்தேக்கத்தில் 155 அடி ஆழ முள்ள தண்ணீர் நிற்கக்கூடும்.

4. இவ்வாறு தேக்கப்பட்ட தண்ணீர் தேவைக்குத் தகுந்தவாறு பல கால்வாய்கள் வழியாக வெளியே ஓடவிடப் படுகிறது.

இவ்வாறு செய்வதால் காவிரி நீர் வீணுகக் கடலில் விழுந்துவிட முடியாது. இதனுல் பல்லாயிர ஏகர் பரப்புள்ள தரிசு நிலங்கள் சிறந்த நன்செய் நிலங்களாக மாற்றப்பட்டுள் ளன. இத்தேக்கத்தினுல் தஞ்சாவூர் ஜில்லா வில் மட்டும் மூன்று லட்சம் ஏகர்களுக்கும் அதிகமான நிலங்கள் சாகுபடிக்குக் கொண்டு வரப்பட்டுள்ளன; இன்னும் பல ஏகர் பரப் புள்ள தரிசு நிலங்கள் சாகுபடிக்குக் கொண்டு வரக்கூடும்.

5. மேட்டூர் அணையினுல் மற்ருெரு பயனும் ஏற்பட்டுள்ளது. அணைக்கு இடது புறத்தில் மின்சாரம் உற்பத்தி செய்வதற்கு இயந்திரங்கள் வைக்கப்பட்டுள்ளன; தேக்கப் பட்டுள்ள நீரை மதகுகளின் வழியாகக் கீழே விழச்செய்து, அவ்விசையினின்றும் மின்சாரம் உற்பத்தி செய்கிருர்கள். சென்னை இராச்சியத்திலுள்ள பல இடங்களுக்கு இங்கி ருந்து மின்சாரசக்தி அனுப்பப்படுகிறது.

6. இவ்வணையினுல், முன்பு ஒரு சிறு கிராமமாக இருந்த மேட்டூர், இப்பொழுது ஒரு அழகிய நகரமாக விளங்குகிறது. அங் குள்ள வீடுகள் யாவும் நவீனமுறையில் எல்லா வசதிகளும் உடையனவாகக் கட்டப்பட்டுள் ளன; தெருக்களிலும் வீடுகளிலும் மின்சார

விளக்குகள் நிறைந்துள்ளன; வீடுகளிலும் தெருக்களிலும் குடி தண்ணீர்க் குழாய்கள் அமைக்கப்பட்டுள்ளன; தெருக்களும் சாலைகளும் அழகாகவும் அகலமாகவும் உள்ளன; அணைக்கு அருகில் ஒரு அழகான பெரிய நந்தவனமும், நகரின் பல பகுதிகளில் பல நந்தவனங்களும் பார்ப்பவர்களைப் பரவசப்படுத்துகின்றன. அணைச் சுவரின் மேல் நடந்து சென்றால் கண்களைக் கவருந் தன்மையுடைய கடல்போன்ற நீர்த்தேக்கத்தையும் சுற்றியுள்ள சோலைகளையும், பச்சைப் பசேலென்ற புல்தரைகளையும், நகரத்தின் நேர்த்தியான அமைப்பையும் காணலாம்.

1. அரும்பொருள் :- இறுதி - கடைசி. பயனற்று - உபயோகமில்லாமல். தரிசு - பயிர் செய்யப்படாத. சாகுபடி - உழுது பயிர் செய்தல். விசை - வேகம். நவீனம் - புதுமையான. நேர்த்தியான - அழகான. தேக்கி – ஒன்று சேர்த்து நிறுத்தி.

2. கேள்விகள் :-

1. நீர்ப்பாசன வசதி என்றால் என்ன ?
2. காவிரி நதி எங்கே தோன்றி, எவ்விடத்தில் கடலில் கலக்கிறது ?
3. காவிரி நதியில் கட்டப்பட்டுள்ள அணைகள் என்னென்ன ?
4. மேட்டூர் அணை எங்கே கட்டப்பட்டுள்ளது ?

5. மேட்டூர் அணையின் அமைப்பு எவ்வாறு உள்ளது ?
6. இவ் வணையினுல் ஏற்பட்டுள்ள பயன்கள் யாவை ?
7. மேட்டூர் நகரம் எவ்வாறு அமைந்துள்ளது ?
8. மேட்டூரில் காணவேண்டிய காட்சிகள் யாவை?

3. பயிற்சி.

1. நீர்ப்பாசனம், தரிசு, ஏறக்குறைய, நீர்த்தேக்கம், நேர்த்தியான, - இவற்றை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுது.
2. எதிர்ச் சொற்களை எழுது : சிற்ருறு, இறுதி பண்டைக்காலம், வெளியே, உயரம்.
3. மேட்டூர் அணையைப் பற்றி ஐந்து வாக்கியங்கள் எழுது.


4. இலக்கணம். கேசவன் அணையைப் பார்த்தான். இது ஒரு வாக்கியம். இதில் 'பார்த்தான்' என்பது முற்றுப் பெற்றக் கருத்தைக் குறிக்கும் ஒரு வினைச் சொல் ; இதை வினைமுற்று என்று சொல்வார்கள்; இது பயனிலை என்றும் கூறப்படும். "எவன் பார்த்தான் ?" என்று கேட்டால் கேசவன் என்று பதில் வரும். இவ்விடையே எழுவாய் எனப்படும். பயனிலையாகிய 'பார்த்தான்' என்பதுடன் 'எதை' என்பதைச் சேர்த்து, "எதைப் பார்த்தான் ?" என்று கேட்டால் 'அணையைப் பார்த்தான்' என்று பதில் வரும். இதில் 'அணை' என்பது செயப்படு பொருள்.

## 7. சிறுவர் செஞ்சிலுவை

| | | | |
|---|---|---|---|
| போர் | சிகிச்சை | இளைஞர் | வேண்டுகோள் |
| தோழமை | நட்பு | நீத்தனர் | மரணம் |
| கோரம் | சிலுவை | உறுப்பினர் | ஆலோசனை |
| படுகாயம் | போர்க்களம் | விளைவு | தொண்டு |
| விபத்து | முதல் உதவி | அந்நிய | சுகாதாரம் |


1. இற்றைக்குச் சற்றேறக்குறைய நூறு ஆண்டுகளுக்கு முன் ஐரோப்பாக் கண்டத்தில் ஒரு பெரும் போர் நடைபெற்றது. அப்போரில் பல்லாயிரம் வீரர் உயிர் நீத்தனர்; பலர் படுகாயம் அடைந்தனர்; காயங்களுக்குச் சரியான சிகிச்சையின்றிப் பலர் மரண மடைந்தனர்.

2. அச்சமயம் அப்போர்க் களத்தின் வழியாக ஸ்வீடன் நாட்டு இளைஞர் ஒருவர் சென்றார்; போர்க்களத்தின் கோரக் காட்சியைக் கண்டு அவர் பெரிதும் வருந்தினார்; தகுந்த சமயத்தில் உதவி இல்லாமல் வீரர்கள் இறப்பதைக் கண்டு இரக்கம் கொண்டார்; அவர்களுக்குத் தம்மாலான உதவிகளைச் செய்தார். ஆனால் அவர் ஒருவரால் வீரர் யாவருக்கும் போதுமான உதவி அளிக்க முடியவில்லை. தம்முடன் பலர் இருப்பின் காயமடைந்த வீரர்களுக்குப் போதுமான உதவி அளிக்க முடியும் என்று அவர் கருதினார்.



காயமடைந்தவர்களுக்கு உதவி செய்தல்

3. அதன் விளைவாக அவ் விளைஞர் தமது கருத்தைப் பல நாடுகளிலும் வெளியிட்டார். 'போர்க் களத்தில் காயமுற்றுத் துன்பப் படும் வீரர்களுக்கு உதவி செய்ய ஒரு சங்கம் அமைக்க வேண்டும்' என்ற அவருடைய வேண்டுகோளை ஏற்றுப் பல நாட்டினர் ஒன்று சேர்ந்தனர். அவர்கள் 'சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம்' என்றொரு சங்கத்தை ஏற்படுத்தினார்கள். இச்சங்கம் செந்நிறமான சிலுவையை அடையாளமாகக் கொண்டுள்ளது. இச் சங்கத்தின் முக்கியமான நோக்கம் பிறருக்கு உதவி செய்வதே ஆகும். இச் சங்கத்தின் கிளைகள் பல நாடுகளில் ஏற்படுத்தப் பட்டன.



4. 1914 ஆம் ஆண்டில் மீண்டும் ஐரோப்பாவில் ஒரு பெரும் போர் மூண்டது. அச் சமயம் சிறுவர்களுக்கென்று இச் சங்கத்தின் கிளை ஒன்று ஏற்பட்டது. அதற்குச் சிறுவர் செஞ்சிலுவைச் சங்கம் என்பது பெயர். இக்கிளையில் இளைஞர் பலர் சேர்ந்து போரில் காயமடைந்தவர்களுக்குப் பல உதவிகளைச் செய்தனர். இச்

சங்கம் இப்பொழுது உலகம் எங்கும் பரவி இருக்கிறது.

5. இச்சங்கங்களில் சாதி, மத, நிற வேற்றுமைகள் கிடையா. உலகிலுள்ள பல நாட்டு மக்களுக்கும் இவை தொண்டு செய்கின்றன. பிறருக்கு உதவி செய்தல், ஏழைகளிடம் இரக்கம் காட்டுதல், துன்புற்றவர்களுக்கு நன்மை செய்தல், நோயுற்றவர்களுக்குச் சிகிச்சை அளித்தல் முதலிய வேலைகளை இச் சங்கம் செய்து வருகிறது.

6. சிறுவர் செஞ்சிலுவைச் சங்கத்தின் முக்கிய நோக்கங்கள் மூன்று. முதலாவது, எல்லாருடனும் தோழமை பூண்டு, சாதி மத வேற்றுமை இன்றி இருத்தல்; இரண்டாவது, பிறர் நலனுக்காக உழைத்தல்; மூன்றாவது, சங்கத்தில் சேர்ந்தவர்கள் தங்களுடைய சுகாதார அறிவையும் பழக்கங்களையும் அதிகரித்துக் கொள்ளுதல்.

7. சிறுவர் செஞ்சிலுவைச் சங்க உறுப்பினர் நற்பழக்கங்களைக் கடைப்பிடிக்கவேண்டும்; தங்கள் உடலை நல்ல நிலையில் வைத்துக் கொள்ள வேண்டும்; வீடுகளையும் பள்ளிக் கூடங்களையும் சுகாதார முறைப்படி சுத்தமாக வைத்துக்கொள்ள வேண்டும்; காயம் அடைந்தவர்க்கும் விபத்துக்களுக்கு

உட்பட்டவர்க்கும் முதல் உதவிச் சிகிச்சை அளிப்பதற்குக் கற்றுக் கொள்ள வேண்டும்.

8. இச்சங்கத்தின் கிளைகள் பள்ளிக் கூடங்களில் ஏற்படுத்தப் பட்டுள்ளன. இவற்றில் மாணவரும் மாணவியருமே உறுப்பினராகச் சேரலாம். ஆசிரியரே உறுப்பினருக்கு ஆலோசனை சொல்லக் கூடியவராக இருப்பார். உறுப்பினரே இச்சங்கங்களை நடத்துவர். இச் சங்க உறுப்பினர் அந்நிய நாட்டு இளைஞருக்குத் தம் நாட்டைப் பற்றிக் கடிதங்கள் வரைவர்; அந்நாடுகளிலிருந்து இவர்க்குப் பதில் கிடைக்கும். இதனால் சங்க உறுப்பினருடைய அறிவு பெருகும்; உலகிலுள்ள பல நாடுகளிலுமுள்ள மக்கள் இடையே நட்பு வளரும்.

9. மாணவரும் மாணவியரும் பரந்த நோக்கமும் உயர்ந்த செயல்களும் நிரம்பிய இச்சங்கத்தில் உறுப்பினராகச் சேர்ந்து உலக மக்களுக்கு உதவி செய்வது மிகவும் அவசியம் ஆகும்.

1. அரும்பொருள் :- நீத்தனர் - விட்டனர். மரணம்- இறப்பு. போர்க்களம் - யுத்தம் செய்யும் இடம். இளைஞர் - சிறுவர். கோரக் காட்சி - சகிக்கமுடியாத காட்சி. தொண்டு - ஊழியம். தோழமை- நட்பு. விபத்து - தற்செயலாக ஏற்படும் கஷ்டம்.

2. கேள்விகள் :-

1. செஞ்சிலுவைச் சங்கம் ஏன் துவக்கப்பட்டது ?
2. இச்சங்கம் கொண்டுள்ள நோக்கங்கள் யாவை ?
3. சிறுவர் செஞ்சிலுவைச் சங்கத்தின் மூன்று நோக்கங்கள் என்ன ?
4. சிறுவர் செஞ்சிலுவைச் சங்கங்களை எப்படி அமைக்கலாம் ?
5. சிறுவர் செஞ்சிலுவைச் சங்கத்தினுல் உண்டாகும் பயன்கள் என்ன ?

3. பயிற்சி.

1. உன் பாடசாலையில் ஒரு சிறுவர் செஞ்சிலுவைச் சங்கம் அமைக்கவேண்டும் என்று உன் தலைமை ஆசிரியருக்கு ஒரு விண்ணப்பம் எழுது.
2. கீழுள்ள சொற்களை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுது – போர்க்களம், சிகிச்சை, வேண்டுகோள், தொண்டு, விபத்து.
3. எதிர்ச் சொற்களை எழுது-மரணம், தோழமை, கோரம், போர்.

4. இலக்கணம். கீழுள்ள வாக்கியங்களில் எழுவாய், பயனிலை, செயப்படு பொருள்களை எடுத்து எழுது.


1. என் பாடசாலையில் செஞ்சிலுவைச் சங்கத்தை ஏற்படுத்தினேன்.
2. மாணவர்களே இச்சங்கத்தை நடத்துவார்கள்.
3. இச்சங்கம் தோழமையை விருத்தி செய்கிறது.
4. உறுப்பினர் பிற நாட்டினருக்குக் கடிதம் வரையலாம்.
5. மாணவர்கள் தினந்தோறும் உடற்பயிற்சி செய்து வரவேண்டும்.

## 8. உடற் பயிற்சி

| | | | |
|---|---|---|---|
| இளமை | உடற்பயிற்சி | உறுதி | உறக்கம் |
| கல்வி | பிணி | கழகம் | செவ்வையாக |
| பொறுமை | திடகாத்திரம் | வலிமை | கற்றல் |
| சால | அகாலம் | பண்டை | கீர்த்தி |

1. 'இளமையிற்கல்' என்று படித்திருக்கிறீர்கள் அல்லவா? ஒவ்வொருவரும் இளமைப் பருவத்திலேயே கல்வி கற்க வேண்டும். கல்வி கற்பதால் அறிவு வளரும். கல்வி அறிவு இல்லாதவன் மூடன் என்று கருதப் படுவான். ஆனால் கல்வி அறிவு மட்டும் போதாது; உடலும் வலிமை பொருந்தியதாக இருக்க வேண்டும். வலிமை மிக்க உடலில் தான் பரந்த அறிவு இருக்கும். ஆதலால், மனிதனுக்குக் கல்வி அறிவுடன் உடல் வலிமையும் இருக்க வேண்டும்.

2. உடல் வலிமை பெறவேண்டுமானால் உடற்பயிற்சி செய்ய வேண்டும். உடல் வலிமை குன்றினால் அடிக்கடி பிணிகள் உண்டாகும்; அதனால் கல்வி கற்றல் தடைப்படும்; மனவலிமை குன்றும்: கற்றவை கவனத்திற்கு வரமாட்டா; ஊக்கமும் உழைப்பும் குன்றும்; சோம்பல் அதிகரித்துச் சுருசுருப்புக் குறையும்.


— Kuppu

3. ஆதலால் உடற்பயிற்சி செய்து உடல் வலிமை பெறவேண்டும். உடற் பயிற்சி செய்வதால், உடலில் இரத்த ஓட்டம் ஏற்படும்; உடலிலுள்ள உறுப்புக்கள் யாவும் அசையும்; உடலின் உள்ளே இருக்கும் அழுக்கு, வியர்வையாக வெளியே வரும்; இரத்தம் சுத்தம் அடையும். இரத்தம் சுத்த மாக உடல் முழுதும் ஓடிக் கொண்டிருந்தால் நோய்கள் உண்டாக மாட்டா.

4. 'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்.' ஒருவனுடைய உடல் வலிவுடன் இருந்தால் அதுவே அவனுக்கு ஒரு செல்வம் ஆகும். நோயற்ற வாழ்வே சுகவாழ்வு. உடல் உறுதியாக இருந்தால் தான் கல்வி செவ்வையாகக் கற்க முடியும்.

5. பள்ளிக்கூடங்களில் கல்வி மட்டும் கற்பிப்பதில்லை; உடற் பயிற்சி முறைகளும் கற்பிக்கிறார்கள். எல்லாரும் ஒரே விதமான உடற்பயிற்சிகளைச் செய்ய முடியாது. அவ ரவர்களுடைய வயதுக்கும் உடல் வன்மைக் கும் தகுந்தபடி உடற்பயிற்சி அமைய வேண் டும். "ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளை யுமா?" என்றொரு பழமொழி உண்டு. இளம் பருவமே உடற்பயிற்சி செய்வதற்கு ஏற்றது

தினந்தோறும் காலையிலும் மாலையிலும் உடற் பயிற்சி செய்ய வேண்டும். உணவு உட் கொண்டவுடனே தேகப்பயிற்சி செய்யக் கூடாது. திறந்த வெளியில், நல்ல காற்றோட் டம் உள்ள இடத்தில் உடற்பயிற்சி செய் வதே சாலச் சிறந்தது. பள்ளிக்கூடங்களில் உங்களுடைய உறுப்புக்களை நீட்டியும் மடக் கியும் அகற்றியும் தேகப் பயிற்சி செய்கிறீர் கள். இவ்வாறே பல விளையாட்டுக்களையும் விளையாடுகிறீர்கள். ஓட்டம், பந்தாட்டம், சடுகுடு, கிளித்தட்டு முதலியவை யாவும் தேகப்பயிற்சி சம்பந்தமான விளையாட்டுக் களேயாம். இவ்வகை விளையாட்டுக்களினால் உடலிலுள்ள உறுப்புக்கள் அசைவு பெற்று, இரத்த ஓட்டம் அதிகரித்து, வியர்வை உண் டாகும்.

6. பெரியவர்கள் இளைஞர்களைப் போல் ஓடி விளையாட முடியாது. ஆதலால் அவர் கள் தினந்தோறும் சிறிது தூரம் உலாவி விட்டு வருதல் நலம். அதனால் உடலிலுள்ள உறுப்புக்கள் அசைந்து, இரத்த ஓட்டம் அதிகரிக்கும். சிறு குழந்தைகள் அழுவதா லும், கைகால்களை அசைப்பதாலும், தவழ் வதாலும், நடப்பதாலும் உடற்பயிற்சி செய் கிறார்கள்.

7. உடற்பயிற்சி ஒழுங்காகச் செய்கிறவர்களுக்கு நல்ல பசி எடுக்கும்; உறக்கம் உண்டாகும்; பொறுமை ஏற்படும்; கோபம் குறையும்; ஊக்கமும் ஞாபக சக்தியும் சுறுசுறுப்பும் உண்டாகும்; அறிவு வளரும்; உடல் வலிமை பெறும்; பிணிகள் சேரமாட்டா. உடற்பயிற்சி செய்யாதவர்கள் பல பிணிகளால் துன்பம் அடைவார்கள்; உடல் நலம் குன்றி அகால மரணத்திற்கு உள்ளாவார்கள்.

8. பண்டைக் காலத்தில் நம் நாட்டில் உடற்பயிற்சி நன்கு கவனம் பெற்று வந்தது. தேகப் பயிற்சிக் கழகங்கள் நாடெங்கும் இருந்தன. பீமன், அருச்சுனன், ஜராசந்தன், துரியோதனன் போன்ற பலசாலிகள் கீர்த்தியுடன் விளங்கினார்கள். அரசகுமாரர்கள் பலவகையான தேகப்பயிற்சி முறைகளைக் கற்று வந்தனர். ஆனால் இப்பொழுது அவ்வாறு இல்லை. மீண்டும் நாம் உடற்பயிற்சியின் மூலம் வலிமை மிக்க உடலைப் பெற வேண்டும். ஆதலால் இளமைப் பருவத்திலிருந்தே நாம் உடற்பயிற்சி செய்து, கல்வி அறிவுடன் திடகாத்திரமான உடலும் பெற வேண்டும்.

1. அரும்பொருள் :- வலிமை - பலம். பிணி - நோய். உறுதி - கெட்டி. செவ்வையாக - நன்ருக. உறக்கம் - தூக்கம். கழகம் - சங்கம். திடகாத்திரம் - ஆரோக்கியம். சால - மிகவும்.

2. கேள்விகள் :-

1. உடல் வலிமை ஏன் அவசியமானது?
2. உடற் பயிற்சியால் உண்டாகும் பயன்கள் யாவை ?
3. உடற் பயிற்சிக்கு ஏற்ற காலம் எது ?
4. பள்ளிக்கூடத்தில் செய்யும் தேகப் பயிற்சி முறைகள் என்னென்ன ?
5. உடல் வலிமை குன்றினுல் என்ன நேரிடும் ?

3. பயிற்சி.

1. பின் வரும் சொற்களை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுது: உடற் பயிற்சி, வலிவு, சால, ஊக்கம், காற்ருேட்டம், கழகம்.
2. காலை - காளை, அழகு - அலகு, இறங்கு - இரங்கு, இறை - இரை, மணம் - மனம், பழம் - பலம்—இவற்றிற்குப் பொருள் கூறுக.
3. கோடுள்ள இடங்களில் சரியான எழுத்துக்களை அமைத்து எடுத்து எழுது:

1. மா— நே—த்தி— வி—யாடவேண்டும். (ர,ல், ளை, லை)
2. தேகப் பயி—சி உடம்புக்கு ந——து. (ல்,ற்,ல)

3. காற்—ட்டம் உ—— இடத்தி— உடற்பயிற்சி செய். (ல், ள, ள், ரு).

4. அ—க்கு போகக் கு—க்க வேண்டும்(ளி, ழு).


4. இலக்கணம்.

I. மூடன், மனிதன், பள்ளிக்கூடம் - இவை ஒவ்வொரு பொருளைக் குறிக்கும் ஒருமை எண்கள். மூடர்கள், மனிதர்கள், பள்ளிக்கூடங்கள் - இவை இரண்டு முதல் பல பொருள்களையும் குறிக்கின்றன. இவை பன்மை எண்கள். வினைச் சொற்களுக்கும் ஒருமை, பன்மை உண்டு. பையன் விளையாடினான்; பையன்கள் விளையாடினார்கள். விளையாடினான் - ஒருமை; விளையாடினார்கள் - பன்மை.

II. கீழ்வரும் வாக்கியங்களில் உள்ள எழுவாய்களைப் பன்மைகளாக மாற்றி அமைக்க :-

1. குழந்தை அழுகிறது.
2. அரசகுமாரன் நன்றாகக் கற்றுத் தேர்ந்தான்.
3. அவன் பள்ளிக்கூடத்தில் படிக்கிறான்.
4. பெண் கும்மி அடிக்கிறாள்.
5. பூனை பாலைக் குடிக்கிறது.

# 9. தேகப் பயிற்சி



| | | | |
|---|---|---|---|
| வரிசை | உயிர்த்து | பஸ்கி | நடம். |
| நிமிர்ந்து | உரம் | கசரத் | பாய்ந்து |
| வேங்கை | சுழற்று | கரம் | பைய |

1. தேகப் பயிற்சி செய்வோம்-வரிசையாய்ச்
   சேர்ந்து நிமிர்ந்து நிற்போம்;
   வேகமாய்க் கால் வீசி-நடப்போம்
   வேங்கை போற் பாய்ந்திடுவோம்,

2. சோம்பலை வெட்டி யெறி-இடுப்பைத்
   தோகை மயில் போல் வளை;
   'ஓம்' என்றுயிர்த்து விடு-மார்பு விரிந்து
   உரம் பெற்று ஓங்கிடவே.

3. கையை மடக்கிடுவோம்-முன்னும் பின்
கையைச் சுழற்றிடுவோம்; [னும்
பைய உட்கார்ந்து எழுவோம்-பஸ்கி
பாதத் தசை வளர்ப்போம். [செய்து

4. வேர்த்துச் சதை புரளக்-கசரத்
வேண்டு மட்டும் செய்வோம்;
சேர்த்துக் கரங்களெல்லாம்-வட்டமாய்ச்
சேர்ந்து நடம் இடுவோம்.

—யோகி சுத்தானந்த பாரதியார்

1. அரும் பொருள் :- உயிர்த்து - மூச்சு விட்டு. உரம் - வலிமை. கரம் - கை. நடம் - ஆட்டம். பஸ்கி - தோப்புக்கரணம். கசரத் - தேகப் பயிற்சிப் பொது.

2. கேள்விகள் :-
   1. இப்பாடலில் சொல்லப்படும் விதம் விதமான உடற் பயிற்சிகள் யாவை?
   2. உடலை எப்படி வளர்க்கவேண்டும் ?
   3. மூச்சு உள்ளுக்கு இழுத்து விடுவதால் பயன் என்ன?
   4. கசரத் எதற்காகச் செய்வது ?

3. பயிற்சி.
   1. பின் வரும் சொற்களை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுது : சோம்பல், தோகை மயில், வேர்த்து, நடம்.
   2. திருத்தி எழுது - மனி அடித்ததும் விலையாட்டு மைதாணத்திர்க்குப் போவாம். அங்கே வறிசையாக நின்ரு, பளவகைத் தேகப் பயிர்ச்சி கலைச் செய்வோம். உடர்ப்பயிச்சி உடலுக்கு அளகையும் பழத்தையும் அழிக்கும்.

# 10. மன்னன் மைதாஸ் II



| | | |
|---|---|---|
| தேவதூதன் | திரைச்சீலை | ஏமாற்றம் |
| பலகணி | துலங்கிற்று | தாங்கொணாத |
| கிரணம் | அற்புதம் | பொன்னுடை |
| கதிரவன் | ஏவலாளர் | இருப்பு |

1. வாலிபனுடைய சொற்களைக்கேட்ட மைதாஸ் மிக்க மகிழ்ச்சி கொண்டான். 'அவன் ஒரு வாலிபனல்ல; அவன் ஒரு தேவ தூதனாகவே இருக்க வேண்டும்' என்று எண்ணினான். அன்றிரவு மைதாஸ் ஆனந்தமாக உறங்கினான். காலையில் கதிரவனுடைய கிரணங்கள் பலகணியின் வழியாக அறையின் உள்ளே வந்து அவனைத் தாக்கின.

அவன் படுத்திருந்த கட்டில், கிரணங்கள் பட்டவுடன் பொன்னுக மாறிற்று! அவன் மேலிருந்த ஆடைகள் பொன்னுடைகளாக மாறின! அது கண்ட மைதாஸ் அளவில்லா ஆனந்தம் கொண்டான். சிறு குழந்தையைப் போல் அறை முழுதும் ஓடியாடினான். கட்டிலின் கால்களைத் தொட்டான்; பலகணியை மறைத்திருந்த திரைச் சீலையைத் தொட்டான்; அறையிலிருந்த மற்றப் பொருள்களையும் தொட்டான்; அணிந்திருந்த ஆடைகளைக் களைந்து மாற்று ஆடைகளை அணிந்தான்; அவையாவும் தங்கமயமாக மாறின; கிரணங்களின் ஒளியில் அவை 'தகதக' வென்று ஒளி வீசின.

2. மைதாஸின் உள்ளம் ஆனந்த வெள்ளத்தில் மிதந்து கொண்டிருந்தது! அவனுக்குத் தலைகால் தெரியவில்லை; அறையில் இருப்புக் கொள்ளவில்லை. மாடியினின்றும் கீழே இறங்கிச் சென்றுன். அவன் கைவைத்த இடமெல்லாம் தங்கமாகத் துலங்கிற்று. மன்னன் மலர் வனத்தை அடைந்தான். அங்கே பலநிறப்பூக்கள் மலர்ந்து காட்சியளித்தன; அவை மிகுந்த அழகுடன் விளங்கின. அவற்றின் நறுமணம் காற்றில் மிதந்து வந்து இன்பமூட்டிற்று.

3. ஆனால் மலர்களின் அழகும் மணமும் மைதாஸ் மனத்தைக் கவரவில்லை. அம் மலர்களை மேலும் அற்புதமாக்க எண்ணினான். ஒவ்வொரு மலரையும் தன் கைகளால் தொட்டான். அவை ஒவ்வொன்றும் பொன்மயமாக மாறியது! இதற்குள் காலை உணவு உட்கொள்ளும் நேரம் ஆயிற்று. மன்னன் உண வருந்த உள்ளே சென்றான்.

4. மைதாஸ் தினந்தோறும் தன் மகளுடன் கூடவே உண வருந்துவது வழக்கம். அவன் தன்மகளை உண்மையாகவே நேசித்தான்; இன்று அவனுக்குக் கிடைத்த அருமையான வரத்தின் பயனாக அவள் மீது அன்பு மிகுந்தது; புதல்வியை அழைத்துவர ஏவலாளரை அனுப்பி விட்டுத் தானும் உண்பதற்கு உட்கார்ந்தான்.

5. சிறிது நேரத்தில் பொன்மேனி அங்கு வந்து சேர்ந்தாள். அவள் அழுத கண்ணும் சிந்திய மூக்குமாக இருந்தாள். அது கண்ட மைதாஸ் வருத்த மடைந்தான். "என் கண்ணே! ஏன் அழுகிறாய்?" என்று கவலையுடன் விசாரித்தான். பொன்மேனி மறுமொழி சொல்லவில்லை; அவள் தன் கையிலிருந்த தங்க ரோஜாமலரை மெதுவாக நீட்டினாள். "ஆகா! என்ன அழகு! இவ்வழ

கிய ரோஜாவில் நீ கவலைப் படுவதற்கு என்ன இருக்கிறது?" என்று மைதாஸ் வினவினான்.

6. "அப்பா! இம்மலரில் என்ன அழகு காண்கிறீர்? இதன் அழகு எங்கே போயிற்று? இதன் மணம் எங்கே? காலையில் எழுந்ததும் வழக்கம் போல் உமக்குச் சில மலர்கள் பறித்துவர மலர்வனத்திற்குச் சென்றேன். அங்கு நான் கண்ட காட்சியால் ஏமாற்றமடைந்தேன். அங்குள்ள மலர்கள் யாவும் மணமற்றுப் போயின. மணமின்றேல் அழகு ஏது? இதைக் காணக்காண எனக்குத் தாங்கொணுத் துயரம் உண்டாகிறது" என்று பொன்மேனி புலம்பினுள்.

7. மைதாஸ் "என்னருமைக் குழந்தாய்! இதற்காக வருந்தலாமா? என்னருகில் உட்கார்ந்து கொள்; உணவு அருந்து; மணம் உள்ள மலர் மாலைக்குள் வாடிவிடும்; ஆனால் தங்க மலர் என்றுமே வாடாது; இதைக் கொண்டு அநேக மணமுள்ள மலர்களை வாங்கலாம்; வருத்தப்படாதே" என்று பொன்மேனியைத் தேற்றினான். பொன்மேனி "இம்மலர்கள் எனக்கு வேண்டாம். இவற்றில் மணமில்லை; இவற்றின் இதழ்களோ கடினமானவை; நிறமோ மஞ்சள்," என்று சொல்லி அம்மலரைக் கீழே எறிந்தாள்!

1. அரும்பொருள் :- துலங்கிற்று - பிரகாசித்தது. அற்புதம் - அதிசயம். ஏவலாளர் - வேலைக்காரர். தாங்கொணாத - பொறுத்துக் கொள்ள முடியாத.

2. கேள்விகள்:-

   1. மைதாஸ் ஏன் ஆனந்த வெள்ளத்தில் மிதந்தான் ?
   2. மலர்வனத்தில் மன்னன் கண்டது என்ன ?
   3. பொன்மேனி ஏன் அழுது கொண்டே வந்தாள்?
   4. மைதாஸ் எவ்வாறு தன் மகளைத் தேற்றினான்?

3. தெரிந்து கொள். பொன் + ஆடை = பொன்னாடை
   மறைத்து + இருந்த = மறைத்திருந்த
   திரை + சீலை = திரைச்சீலை
   உணவு + அருந்த = உணவருந்த

4. பயிற்சி.

   1. தேவதூதன், பலகணி, திரைச்சீலை, அற்புதம், ஏமாற்றம் - இச் சொற்களை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுது.
   2. பின்வரும் சொற்களை பிரித்து எழுது - கையிலிருந்த, ஏமாற்றமடைந்தேன், மணமற்று, என்னருகில், ஓடியாடினான், இன்பமூட்டிற்று.
   3. வாலிபன், உறங்கினான், எறிந்தாள், தேற்றினான், பொன்மேனி, கிரணம், ஆடை, ஓடினான், மலர்கள், உட்கார்ந்தான் - இவற்றிலுள்ள பெயர்ச் சொற்களையும் வினைச் சொற்களையும் தனித் தனியாகப் பிரித்து எழுது.
   4. எதிர்ச் சொற்களை எழுது - அழுகை, அன்பு, வருத்தம், அருகில், கடினம்.

வணக்காப்பு ... 008.

5. இலக்கணம்.

கீழுள்ளவற்றில் எழுவாய், பயனிலை, செயப்படு பொருள்களை எடுத்து எழுது.

1. சூரியக் கிரணங்கள் மன்னனைத் தாக்கின.
2. மேலாடைகள் பொன்னுடைகளாக மாறின.
3. மைதாஸ் மாற்று ஆடைகளை அணிந்தான்.
4. மன்னன் மகளை உண்மையாகவே நேசித்தான்.
5. பொன்மேனி பூவைக் கீழே எறிந்தாள்.

## 11. நீராவி

| | | |
|---|---|---|
| மதிநுட்பம் | வீண்காலம் | கண்ணும் கருத்துமாக |
| ஆராய்ந்து | புதுமை | வாளாக |
| அறிஞன் | கண்டித்தான் | தாராளமாக |
| மனக்கண் | மாளிகை | நனவு |
| வானொலி | இயங்குதல் | வசதி |

1. இங்கிலாந்திற்கு வடக்கே ஸ்காட்லந்து என்றொரு நாடு இருக்கிறது. அந் நாட்டில் கிர்னுக் என்னும் நகரம் ஒன்று உளது. பல ஆண்டுகளுக்கு முன்னர், அந்த நகரில் ஒரு ஏழைக்குடும்பம் வாழ்ந்து வந்தது. அக் குடும்பத்தில் ஜேம்ஸ் என்ற ஒரு சிறுவன் பிறந்தான். ஜேம்ஸ் மதிநுட்பம் மிகுந்தவன். இளமைப் பருவத்திலேயே ஜேம்ஸ் எதையும் ஆராய்ந்து அறிவதில் விருப்பம் கொண்டிருந்

தான். இவ் விருப்பத்தினாலேயே அவன் பிற் காலத்தில் ஒரு சிறந்த அறிஞனானான்.

2. ஜேம்ஸ் பன்னிரண்டு வயது அடைந் தான். ஒருநாள் அவன் சமையல் அறையில்



இருந்த ஒரு அடுப்பின் அருகில் அமர்ந்து இருந்தான். அப்பொழுது அடுப்பின் மீது இருந்த ஒரு மூக்குப் பாத்திரத்தில் தண்ணீர் காய்ந்து கொண்டிருந்தது. சிறிது நேரத்தில் தண்ணீர் கொதிக்கத் தொடங்கிற்று. மூக் கின் வழியாக நீராவி "உஸ்" என்ற ஓசை யுடன் வெளியே வந்து கொண்டிருந்தது.

3. சிறுவன் ஜேம்ஸ் வெளி வந்து கொண்டிருந்த நீராவியை உற்றுக் கவனித்

தான். அச் சமயத்தில் அவன் தாயார் அங்கே வந்தாள். சிறுவன் படிக்காமல் வேடிக் கையைப் பார்த்துக் கொண்டு வீண்காலம் கழிப்பதாக அவள் கருதினாள். "ஏன் இப் படிக் காலத்தை வீணாகக் கழிக்கிறாய்? இதில் என்ன புதுமை கண்டாய்? தண்ணீர் காய் வதை நீ எப்பொழுதும் பார்த்ததில்லையா? தண்ணீர் கொதிக்கும்பொழுது நீராவி வெளி வருவதை நீ இதுவரையில் கண்டதில்லையா? போய் உன் பாடங்களைப் படி" என்று தாயார் அவனைக் கண்டித்தாள்.


4. தாயாருடைய சொற்கள் ஜேம்ஸ் செவிகளில் நுழையவில்லை. அவன் தன் காரியத்திலேயே கண்ணும் கருத்துமாக இருந்தான்; நீராவி வெளிப்படுவதை மிகவும் கவனமாகப் பார்த்துக் கொண்டிருந்தான். தாயார், மகன் வேடிக்கை பார்க்கிறான் எனக் கருதி வாளா யிருந்தாள்.

5. தாயார் சென்ற பிறகு ஜேம்ஸ் அந் தப்பாத்திரத்தின் மூக்கை மூடினான். மூக்கின் வழியாக அது வரையில் வெளியே வந்து கொண்டிருந்த நீராவி, அவ்வழியாக வர முடி யாமல் பாத்திரத்திற்குள்ளேயே அடைப் பட்டுப் போயிற்று. சிறிது நேரங் கழித்து பாத்திரத்தின் மேல் மூடி அசைய ஆரம்பித்

தது. இன்னும் சற்று நேரத்தில் நீராவி மேல் மூடியைக் கீழே தள்ளி விட்டு, தாராளமாக வெளிவரத் தொடங்கிற்று.

6. அக் காட்சியைச் சிறுவன் ஜேம்ஸ் கண்டான்; நீராவியின் சக்தியைக் கண்டு வியப்படைந்தான். நீராவியின் சக்தியை மனிதன் பலவிதமாகப் பயன் படுத்திக் கொள்ளலாம் என்று அறிந்தான். அப்பொழுது இவனுடைய மனக்கண் முன்னே பல காட்சிகள் தோன்றின. நீராவியின் சக்தியினால் கடலில் கப்பல்கள் செல்வது போலவும், வண்டிகள் நெடுந்தூரம் அச் சக்தியினால் ஓட்டப்படுவது போலவும் அவன் கனவு கண்டான்.


7. ஜேம்ஸ் என்ற ஏழைச் சிறுவன் அந்நாளில் கண்ட கனவு இந்நாளில் நனவா



யிற்று! நீராவியின் சக்தியினால் உலகம் பல நன்மைகளை இன்று அடைந்துள்ளது. நீரா

வியின் சக்தியினுல் இன்று இரயில்வண்டிகள் ஓட்டப்படுகின்றன ; நெடுந்தூரம் அவற்றில் நாம் சுகமாகப் பிரயாணம் செய்கிருேம். கடலில் செல்லும் கப்பல்கள் நீராவியின் சக்தியினுல் செலுத்தப்படுகின்றன ; தொழிற் சாலேகளில் நீராவியினுல் பல இயந்திரங்கள் இயங்குகின்றன; அங்கே வாழ்க்கைக்குத் தேவையான பல பொருள்கள் செய்யப்படுகின்றன.

8. நீராவிக்கப்பல் முதன் முதல் 1812 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் கடலில் மிதக்க



விடப்பட்டது. இக்கப்பல்களேக் கட்டியவர் ஜான்வுட் என்பவர். இப்பொழுதுள்ள நீராவிக் கப்பல்கள் கடலில் மிதக்கும் மாளிகைகள்

போல் காணப்படுகின்றன. கடைகளும், சினிமாக் கொட்டகைகளும், விளையாடும். இடங்களும், நூல் நிலையமும், வானொலி நிலையமும், உணவு விடுதியும், உலாவும் இடமும், இன்னும் இவைபோன்ற பல வசதிகளும் இருக்கின்றன. இக்காலக் கப்பல்கள் சிலவற்றை 'மிதக்கும் நகரங்கள்' என்றும் சொல்லலாம்.

1. அரும்பொருள் :– மதிநுட்பம் - கூர்மையான புத்தி. அறிஞன் - புத்தியுள்ளவன். வாளாக - சும்மா. தாராளமாக - தடையில்லாமல். நனவு - உண்மை. இயங்குதல் - ஓடுதல். வானொலி - வானத்திலிருந்து கேட்கும் சப்தம்.

2. கேள்விகள் :-

1. ஜேம்ஸ் எங்கே பிறந்தான்?
2. தாயார் ஜேம்ஸை ஏன் கண்டித்தாள்?
3. மூடி ஏன் கீழே விழுந்தது?
4. ஜேம்ஸ் கண்ட கனவு என்ன?
5. நீராவியின் சக்தி இப்பொழுது எப்படிப் பயன் படுகிறது?

3. பயிற்சி.

1. எதிர்ப் பதங்களை எழுது: புதுமை, அறிஞன், கனவு, மாளிகை.
2. கண்ணும் கருத்துமாக, வானொலி, வாளாக, வீண்காலம், மதிநுட்பம்—இச்சொற்களை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுது.

4. இலக்கணம்.

வாக்கியங்களில் எழுவாயும் பயனிலையும் பொருந்தி இருக்கவேண்டும் என்று அறிந்தோம்.

கீழ்க்காணும் வாக்கியங்களைத் திருத்தி அமைக்க :

1. பாத்திரத்தில் தண்ணீர் கொதித்துக் கொண்டிருந்தன.
2. சிறுவன் படிக்காமல் வீண்காலம் கழிக்கிறார்கள்.
3. பையன்கள் பாடம் படித்தான்.
4. கப்பல் நீராவியின் சக்தியால் ஓடுகின்றன.
5. கப்பல்கள் மிதக்கும் மாளிகை போல் காணப்படுகின்றது.

## 12. கூட்டுறவு

| | | |
|---|---|---|
| **அத்தியாவசியம்** | **கூட்டுறவு** | **சாதனம்** |
| **வருவாய்** | **அலுவல்** | **வேரூன்றுதல்** |
| **பகைவர்** | **தன்னந்தனியனாக** | **ஈடு** |
| **மத்திய நிதி** | **சிக்கனம்** | **பேணி** |
| **அபகரித்து** | **பணி** | **கொதுவை** |
| **மூலதனம்** | **தொழிலாளர்** | **சமூகம்** |
| **தனவந்தர்** | **மீட்டல்** | **நிர்வாகம்** |
| **தணிக்கை** | **உறுப்பினர்** | **அரசியலார்** |

1. ஒரு தேசத்திலுள்ள மக்களிடையே ஒற்றுமை அத்தியாவசியமானது. மக்களிடையே ஒற்றுமை யில்லாவிடில் நாட்டைப் பகைவர்கள் அபகரித்துக் கொள்வார்கள்

நாட்டில் ஒற்றுமை ஏற்பட வேண்டுமானுல் சமூகத்தில் ஒற்றுமை தோன்றவேண்டும். சமூகத்தில் ஒற்றுமை குன்றினுல் நாட்டிலும் ஒற்றுமை குறையும்.

2. சமூக ஒற்றுமை ஏற்படுவதற்குக் கூட்டுறவு முறையே சிறந்தது. மேல் நாட்டினரின் வாழ்க்கைத் தரம் உயர்ந்திருப்பதற்குக் காரணம் அவர்களிடம் காணப்படும் ஒற்றுமையும் கூட்டுறவு முறையுமேயாகும். ஒருவன் ஒரு காரியத்தைத் தன்னந் தனியனுய்ச் செய்வதைப் பார்க்கிலும், பலர் ஒன்று கூடி அப்பணியைச் செய்வதால் வெற்றி எளிதில் கிட்டும். ஒரு கிராமத்தில் ஒரு சாலை அமைக்க வேண்டுமானுல், தன்னந் தனியனுக ஒருவன் அதை அமைக்க முடியுமா? அது முடியாத காரியம். வீட்டிற்கு ஒருவராக ஒன்று சேர்ந்து வேலை செய்தால் வெகு எளிதில் சாலையை அமைக்க முடியும். இவ்வாறு ஒற்றுமையுடன் பலர் சேர்ந்து வேலை செய்வதைக் கூட்டுறவுமுறை எனச் சொல்வர். பலர் சேர்ந்து கூட்டுறவு முறையில் அமைக்கும் சங்கம் கூட்டுறவுச் சங்கம் எனப்படும்.

3. ஒவ்வொரு கிராமத்திலும் வட்டிக்குப் பணம் கொடுக்கும் தனவந்தர்கள் இருக்

இருர்கள். அவர்களிடத்தில் குடியானவர்கள் பயிர்த்தொழில் செய்வதற்குத் தேவையான சாதனங்களை வாங்குவதற்குக் கடன் பெறுவார்கள். நிலம் வாங்குவதற்கும், கிணறு வெட்டுவதற்கும், மாடு வாங்குவதற்கும், கலப்பை முதலான பொருள்களை வாங்குவதற்கும், அவர்களுக்கு அடிக்கடி பணம் தேவையாயிருக்கும். கடன் பெறும் தொகையைத் திருப்பிக்கொடுக்க அவர்களால் இயலுவதில்லை. கடனுக்கு ஈடாக வீடுகளையும், நிலங்களையும் கொதுவை வைப்பார்கள். இத்துன்பங்களிலிருந்து விவசாயிகளை மீட்பதற்காக அரசியலார் அநேக கூட்டுறவுச் சங்கங்களைக் கிராமங்களில் ஏற்படுத்தியுள்ளார்கள். நாணயமுள்ள எவரும் இச்சங்கங்களில் உறுப்பினராகச் சேரலாம்.

4. இச் சங்கங்கள் உறுப்பினருடைய தேவைகளுக்குத் தகுந்தபடி குறைந்த வட்டிக்குக் கடன்கள் வழங்குகின்றன. சங்கங்கள், வருவாய் அதிகம் உள்ளவர்களிடமிருந்து எளிய வட்டிக்குக் கடன்வாங்கிச் சற்று அதிகமான வட்டிக்கு உறுப்பினர்களுக்குக் கடன் கொடுக்கின்றன. கடனுகப் பெறும் தொகையைக் கொண்டு விவசாயிகள் கலப்பை, எரு, கால்நடைகள், விதைகள் முதலியவைகளை

வாங்கிக் கொள்வார்கள். இக் கடனை உறுப்பினர்கள் ஆண்டுதோறும் சிறிது சிறிதாகத் திருப்பிக் கொடுக்கலாம்.

5. ஒவ்வொரு ஜில்லாவிலும் கூட்டுறவு முறையில் மத்திய நிதிகள் அமைக்கப்பட்டுள்ளன. கிராமச் சங்கங்களுக்கு இந்த நிதிகள் பொருளுதவி அளிக்கும். சங்கத்தின் மூல தனத்திற்குத் தகுந்தபடி மத்திய நிதிகள் கடன் கொடுக்கும். ஒவ்வொரு சங்கத்திற்கும் ஒரு நிர்வாக சபை உண்டு. நிர்வாக உறுப்பினர்களைச் சங்க உறுப்பினர்களே தேர்ந்தெடுப்பார்கள். சங்கத்தின் அலுவல்களை நிர்வாக சபையினரே கவனிப்பார்கள்.

6. கூட்டுறவுச் சங்கங்களில் பலவகைகள் உண்டு. அவற்றுள் கடன் சங்கங்கள், கைத்தறி நெசவாளர் சங்கங்கள், சிக்கனச் சங்கங்கள், தொழிலாளர் சங்கங்கள், விற்பனைச் சங்கங்கள், வியாபாரச் சங்கங்கள், நூற்போர் சங்கங்கள் என்பன சில வகைகள் ஆகும். இவற்றை அரசியலாரே தணிக்கை செய்வார்கள்.

7. கூட்டுறவுச் சங்கங்கள் யாவும் அரசியலார் ஆதரவிலேயே நடைபெறுகின்றன. நமது நாட்டில் இச்சங்கங்கள் வெகு விரைவாகப் பரவி வருகின்றன. இவை சிக்கன

வாழ்க்கையையும் ஒற்றுமையையும் மக்களுக்குப் போதிக்கின்றன. கூட்டுறவு இயக்கம் நன்ருக நாட்டில் வேரூன்றினுல், நாட்டு மக்கள் சுகவாழ்வு பெறுவார்கள்; நாடும் செழிப்புறும். ஆகவே இம்முறையை நாம் பேணி, இதனுல் உண்டாகும் பயன்களை விரைவில் அடைவோமாக!

1. அரும்பொருள் :- அத்தியாவசியம்- மிகவும் தேவை. பகைவர்-விரோதிகள். அபகரித்து - பிடுங்கி. பணி- வேலை. தனவந்தர் - பணக்காரர். சாதனம் - கருவி. ஈடு - சமம். மீட்டல் - திரும்பப் பெறல். வரு வாய் - வருமானம்; அலுவல் - காரியம். சிக்கனம் - கொஞ்சமாகச் செலவு செய்தல். தணிக்கை - சரி பார்த்தல். பேணி - ஒழுகி.

2. கேள்விகள் :-

   1. கூட்டுறவு முறையினுல் ஏற்படும் பயன்கள் எவை?
   2. குடியானவர்கள் அடையும் துன்பங்கள் என்ன?
   3. கூட்டுறவுச் சங்கங்கள் செய்யும் நன்மைகள் என்ன ?
   4. கூட்டுறவுச் சங்கங்களுக்கு எவ்வாறு பொருளுதவி அளிக்கப்படுகிறது ?
   5. கூட்டுறவுச் சங்கங்களில் சில வகைகளைச் சொல்லு.

3. பயிற்சி.

   1. எதிர்ச் சொற்களை எழுது—பகைவர், தனவந்தர், கடன், சிக்கனம், தொழிலாளர், ஒற்றுமை.

2. பின்வரும் சொற்களை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுது:- அத்தியாவசியம், தன்னந் தனியனாக, பணி, மூலதனம், அலுவல், வேரூன்றுதல்.
3. பிரித்து எழுது:- பயிர்த்தொழில், இயலுவதில்லை, பொருளுதவி, வேரூன்றல்.
4. உன் கிராமத்தில் ஒரு கூட்டுறவுச் சங்கம் அமைக்க வேண்டும் என்று ஜில்லா கூட்டுறவு அதிகாரிக்கு ஒரு விண்ணப்பம் எழுது.

4. **இலக்கணம். 'திணை'** என்பது **'குலம்'.** அது இரு வகைப் படும். 1. உயர்திணை. 2. அஃறிணை.

1. உயர்திணை மனிதர்களையும் தேவர்களையும் குறிக்கும்.
2. அஃறிணை மனிதர், தேவர் நீங்கலாக மற்றவைகளைக் குறிக்கும்.

(உ-ம்) ரங்கன், கமலம், ஓடினாள் —— உயர்திணை
மாடு, கோழி, நின்றன —— அஃறிணை

## 13. பெற்றோரைப் பேணுதல்

| | | | |
|---|---|---|---|
| **உற்றவர்** | **முற்றுமே** | **செப்பிய** | **மங்களம்** |
| **பெற்றவர்** | **உபசாரம்** | **தாலாட்டு** | **திருப்பாட்டு** |
| **நமஸ்காரம்** | **அமுது** | **அமரர்** | **நிலமிசை** |
| **வகித்து** | **பாக்கியம்** | **களித்தீரே** | **இனிது** |

1. உற்றவரே! என்னைப் பெற்றவரே! தினம்
உமக்கே நமஸ்காரம்;
முற்றுமே நீர் செய்த உதவிக்கு நான் என்ன
மொழிவேன் உபசாரம்?



2. தேனினும் அமுதிலும் இனிதே எனக்கு நீர்
 செப்பிய தாலாட்டு ;
வானினும் அமரர்க்கு வருமோ இது போல்
 மங்களத் திருப்பாட்டு ?

3. பல பொருள் எனக்குச் சம்பாதித்து வைக்கவே
பலவிதம் உழைத்தீரே ;
நிலமிசை உம் உயிர்க்கு உயிர் நானே என்று
நினைத்து நீர் பிழைத்தீரே !

4. துக்கங்கள் எல்லாம் நீர் வகித்துக் கொண்டு
சுகம் எனக் களித்தீரே ;
மக்களே சகல பாக்கியம் என்று எண்ணி
மனம் மிகக் களித்தீரே !

—வேதநாயகம் பிள்ளை

1. அரும்பொருள் :- உற்றவர் - தாய் தந்தையராக அமைந்தவர். உபசாரம் – மரியாதை. அமுது - அன்னம், சாதம். செப்பிய–சொல்லிய. தாலாட்டு–குழந்தைகளைத் தூங்கவைக்கப் பாடும் பாடல். அமரர் - தேவர். மங்களம் – நன்மை. திருப்பாட்டு - அழகிய பாட்டு. நிலமிசை – பூமியில். வகித்து – ஏற்று. பாக்கியம் இன்பம். களித்தீரே - சந்தோஷித்தீரே. நமஸ்காரம்-வணக்கம். முற்றுமே-முழுவதுமே.

2. கேள்விகள் :

1. பெற்றோரை ஏன் வணங்கவேண்டும் ?
2. 'மங்களத் திருப்பாட்டு' எது ?
3. பெற்றோர் குழந்தைகளுக்குச் செய்யும் நன்மைகள் யாவை ?
4. பெற்றோர் எதைப் பாக்கியம் எனக் கருதுகிறார்கள் ?

3. பயிற்சி :

1. உபாசாரம், தாலாட்டு, அமரர், மங்களம்,சுகம், பாக்கியம் - இச் சொற்களை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுது.

2. இப்பாடலில் பெற்ஞேர் மக்களுக்குச் செய்யும் நன்மைகள் யாவை என்று சொல்லப்பட்டுள்ளது ?

4. இலக்கணம்; **தோன்ரு எழுவாய்.**

நில், உட்கார், வா, போ, - இவை ஒவ்வொன்றும் ஒரு கருத்தை வெளியிடும் சொற்கள். நீ நில், நீ உட்கார், நீ வா, நீ போ என இவை இருக்கவேண்டும். இவற்றில் எழுவாய், பயனிலைகளை எடுத்து எழுது. ஆனுல் நில், உட்கார், வா, போ என்ற சொற்களில் பயனிலைகள் மட்டும் உள்ளன; எழுவாய்–நீ–மறைந்துள்ளது. இவ்வாறு மறைந்து இருக்கும் எழுவாய்க்குத் தோன்ரு எழுவாய் என்பது பெயர்.

1. பெற்ஞேரைக் கனம் பண்ணு.
2. குழந்தையைத் தாலாட்டு.

இந்த வாக்கியங்களில் எழுவாய் எவை?

## 14. மன்னன் மைதாஸ் III

| | | | |
|---|---|---|---|
| **புதல்வி** | **பக்குவம்** | **வேந்தன்** | **புலம்பினுன்** |
| **பருகினுன்** | **விபரீதம்** | **ஆறுதல்** | **கதறினுன்** |
| **கோப்பை** | **அறுசுவை** | **பொற்சிலை** | **மதிமோசம்** |
| **அலறினுன்** | **தவித்தான்** | **பொலிவு** | **நாணயம்** |
| **உள்ளன்பு** | **பேராசை** | **அமைதி** | **நாணம்** |

1. மன்னனும் புதல்வியும் உணவருந்த ஆரம்பித்தனர். முதலில் மைதாஸ் ஒரு கோப்பையில் பாலை எடுத்துப் பருகினுன்.

உடனே கோப்பை தங்கக் கோப்பையாக மாறியது! பால் மன்னனுடைய வாயில் பட்டதும் அது பொன்கட்டியாக மாறிப் போயிற்று! உடனே மைதாஸ் 'ஆ' வென்று அலறினன். நன்ருகப் பக்குவம் செய்யப் பட்ட ஒரு ரொட்டித் துண்டை உண்பதற் கெனக் கையால் எடுத்தான். அவன் கைப் பட்டவுடனே அதுவும் தங்க மாயிற்று !

2. "ஐயோ! என்ன விபரீதம் ! நான் எப்படி உண்பேன்?" என்று மன்னன் வருந்தினன். கையால் தொட்ட உணவு வகைகள் யாவும் தங்கமாக மாறின! பசியோ அதிகரித்தது! அறுசுவை உண்டிகள் அரசன் கண்முன்னே இருக்க, அவற்றை அருந்த முடியாமல் அரசன் தவித்தான். இவ் வேந் தனின் வாழ்க்கையைக் காட்டிலும் கூழ் குடிக்கும் ஒரு ஏழையின் வாழ்க்கையே சிறந்ததல்லவா ?

3. தந்தையின் துன்பத்தைப் பொன் மேனி கண்டாள்; தகப்பனுரை உற்று நோக்கி ஞள்; அவன் பெருமூச்சு விடுவதைக் கவனித் தாள்: தந்தைக்கு ஆறுதல் அளிக்க விரும்பி ஞள். உடனே தந்தையின் அருகில் சென்று அவனைத் தழுவிக் கொண்டாள்! அன்பின் பெருக்கால் மைதாஸ் குனிந்து அவளை முத்த

மிட்டான்! அவ்வளவுதான்! அவள் முகம் மஞ்சள் நிறம் அடைந்தது; கண்களினின்றும் வழிந்த கண்ணீர்த் துளிகள் பொன்மணி களாயின; அவள் உடல் ஒரு பொற்சிலையா யிற்று; உடலின் மென்மை நீங்கி வன்மை உண்டாயிற்று; கண்கள் ஒளி இழந்தன; வாய் பேச்சை இழந்தது; முகப்பொலிவு மறைந்தது; கைகால்கள் அசைவற்றுப் போயின.




4. இக் காட்சியைக் கண்ட மைதாஸ் தன் கைகளைப் பிசைந்து கொண்டான்; அருமை மகளைச் சுற்றிச் சுற்றி வந்தான்; "என் குழந்தாய்" என்று புலம்பினான். "என்னோடு பேசமாட்டாயா?" என்று கதறினான்.

ஒன்றும் பயனில்லை. "மதிமோசம் போனேனே" என்று அழுதான். ஆனால் சிலை உயிர் பெற்று எழுந்து வருமா?

5. அங்கிலையில் மன்னன் முன்னே மீண்டும் தேவதூதன் தோன்றினான். அவனைக் கண்ட மைதாஸ் நாணமடைந்தான். தூதன் மன்னனைப் பார்த்து "நண்பா! நீ மகிழ்ச்சியுடன் இருக்கிறாயா?" என்று வினவினான். மைதாஸ் வருத்தத்துடன் "நான் மிகுந்த துயரம் அடைந்துள்ளேன்" என்றான். "ஏன்? வரம் பலிக்கவில்லையா?" என்றான் தேவதூதன். மைதாஸ், "ஐயோ! பொன்னால் பயன் இல்லை. என் புதல்வியை நான் இழந்து விட்டேன். வேறுதுயரம் என்ன வேண்டும்?" என்று வருந்தினான்.

6. தேவதூதன், "அப்படியா! இது உண்மையா? உனக்கு இப்பொழுது குடிக்கத் தண்ணீர் வேண்டுமா அல்லது இன்னும் தொடுவதெல்லாம் பொன்னாக மாற வேண்டுமா?" என்று வினவினான். "ஐயா! ஒரு கோப்பை குளிர்ந்த நீர் கிடைத்தால்...." என்றான் மன்னன். தேவதூதன் மீண்டும், "உனக்கு ஒரு கவளம் அன்னம் வேண்டுமா? அல்லது வரமே போதுமா?" என்றான். மன்னன் "எனக்கு ஒரு கவளம் அன்னம்போதும்.

உலகில் அதுவே சிறந்தது'' என்ருன். திரும்பவும் தூதன், "மன்ன! உன் புதல்வி உயிர் பெற்று உன்னை மகிழ்விக்க வேண்டுமா? அல்லது நான் அளித்த வரமே போதுமா?'' என்ருன். மைதாஸ், "என் கண்மணி பொன் மேனியே எனக்கு வேண்டும். இவ்வுலகமே பொன்னுக மாறினலும், என் புதல்விக்கு அது ஈடாகாது'' எனப் புகன்ருன்.

7. அதுகேட்ட தேவதூதன் நகைத்தான். "மைதாஸ்! இந்த வரத்தை நீ உண்மையாகவே வெறுக்கிருய். உன் தோட்டத்தின் அருகிலுள்ள ஆற்றில் நீ நீராடி, அதிலிருந்து ஒரு குடம் தண்ணீர் கொண்டு வந்து, பொன்னுக மாறிய பொருள்களின் மேல் தெளி. உடனே அவை முன்னை நிலையை அடையும். ஆனல் நீ இதை உள்ளன்புடன் செய்தால் மட்டும் உன் பேராசையால் நேர்ந்த துன்பங்கள் நீங்கும்'' எனத் தேவ தூதன் மொழிந்து மறைந்தான்.

8. ஒரு மண் பாண்டத்தைக் கையில் எடுத்துக் கொண்டு மன்னன் ஆற்றை நோக்கி விரைந்தான்; ஆற்றில் மூழ்கினன்; அவன் மனம் அமைதி அடைந்தது; பேராசை நீங்கியது; கரை ஏறி வந்தான்; அருகிலிருந்த மலரைத் தொட்டான். அது பொன்

ளுக மாறவில்லை ! அது கண்டு மைதாஸ் மன மகிழ்ந்தான்.

9, உடனே பாண்டத்தில் ஆற்று நீரைக் கொணர்ந்தான் ; பொன்மேனியின் சிலையின் மேல் அந் நீரைத் தெளித்தான். உடனே பொன்மேனி உயிர் பெற்றாள் ! "தந்தையே ! என் ஆடையை ஏன் நனைக்கிறீர்கள் ?" என்று கேட்டாள். மைதாஸ் மறுமொழி சொல்லாமல் அவளைத் தோட்டத்திற்கு அழைத்துச் சென்றான். அங்கிருந்த செடிகளின் மேல் நீரைத் தெளித்தான். அவை மீண்டும் பழைய அழகையும் மணத்தையும் பெற்றன ! மன்னனும் மகளும் அம் மலர்களைக் கண்டு மகிழ்ந்தனர்.

1. அரும் பொருள்:- பருகினான்-குடித்தான். அலறினான்-வாய்விட்டு அழுதான். விபரீதம் - இயற்கைக்கு மாறானது. தவித்தான்-கஷ்டப்பட்டான். பொலிவு-பிரகாசம். மதிமோசம்-புத்தியை இழத்தல். நாணம்-வெட்கம்.

2. கேள்விகள்:-
   1. மைதாஸின் வாழ்க்கையைவிட ஒரு ஏழையின் வாழ்க்கை ஏன் சிறந்தது ?
   2. பொன்மேனி எவ்வாறு பொற்சிலை யானாள் ?
   3. மைதாஸ் தேவதூதனிடம் என்ன வேண்டினான் ?
   4. தேவதூதன் மன்னனுக்குக் காட்டிய வழி என்ன ?

5. பொன்மேனி எப்படி உயிர் பெற்று எழுந்தாள்?

3. பயிற்சி.

1. விபரீதம், பக்குவம், அறுசுவை, பொலிவு, மதிமோசம், உள்ளன்பு - இச்சொற்களை உன் சொந்த வாக்கியங்களில் அமைக்க.

2. தகுந்த இடங்களில் மேற்கோள் குறிகளை இடு: மற்ற நிறுத்தக் குறிகளையும் இடு.

தேவதூதன் மன்னனை நோக்கி நண்பா நீ சுகமாக இருக்கிறாயா என்றான் நான் மிகுந்த துயரம் அடைந்துள்ளேன் என்றான் மன்னன் ஏன் என் வரம் பலிக்க வில்லையா என்றான் தேவதூதன் ஐயா பொன்னால் என்ன பயன் என் புதல்வியை இழந்தேன் என்று மைதாஸ் புலம்பினான்.

4. கோடிட்ட இடங்களில் ஏற்ற சொற்களை அமைக்கவும்.

1. நான் எவ்வாறு ——— என்று மன்னன் வருந்தினான்.
2. தந்தைக்குப் ——— ஆறுதல் ——— விரும்பினாள்,
3. பொன்மேனியின் முகப் ——— மறைந்தது.
4. இவ்வுலகமே ——— மாறினாலும் அது என் புதல்விக்கு ———
5. ஆற்றில் ——— மைதாஸின் மனம் ——— அடைந்தது.

5. இலக்கணம்: பால்

பால் என்பது பிரிவு எனப் பொருள்படும். பால் ஐந்து வகைப்படும். அவை ஆண்பால், பெண்பால், பலர் பால், ஒன்றன் பால், பலவின் பால் என்பன.

| | | |
|---|---|---|
| மைதாஸ் - ஆண்பால் | உயர்திணை | வந்தான் |
| பொன்மேனி - பெண்பால் | | வந்தாள் |
| ஏவலாளர் - பலர்பால் | | வந்தார்கள் |


| | | |
|---|---|---|
| பூ - ஒன்றன்பால் | அஃறிணை | வந்தது |
| பூக்கள் - பலவின் பால் | | வந்தன |

ஆண்பால், பெண்பால், பலர் பால் ஆகிய மூன்றும் உயர்திணைக்கு உரியவை; பலர்பால் ஒன்றுக்கு மேற்பட்டவர்களைக் குறிக்கும். ஒன்றன்பால், பலவின்பால் ஆகிய இரண்டும் அஃறிணைக்கு உரியவை. ஒருஅஃறிணைப் பொருளைக்குறிப்பது ஒன்றன்பால்; ஒன்றுக்குமேற்பட்ட அஃறிணைப் பொருள்களைக் குறிப்பது பலவின்பால்.

கீழ்க்காணும் வாக்கியங்களில் (1) உயர்திணை, அஃறிணைப் பெயர்களை எடுத்து எழுது. (2) இவைகளுக்குப் பால்கள் யாவை என்று எழுது.

1. மைதாஸ் வாலிபனைக் கண்டு வெட்கம் அடைந்தான்.
2. பொன்மேனி தந்தைக்கு ஆறுதல் அளிக்க விரும்பினாள்.
3. பூக்கள் மணம் இல்லாதிருந்ததைப் பொன்மேனி கண்டாள்.
4. மைதாஸ், மகள் சிலையானதைக் கண்டு மனம் வருந்தினான்.
5. தேவதூதன் மன்னனுக்கு வரம் அளித்து மறைந்தான்.

# 15. நூல் நிலையம்



| | | |
|---|---|---|
| இன்றியமையாத | கலாசாலை | நடை |
| சட்டம் | அறியாமை | நிறுவப்பட்டன |
| இலவசம் | இயற்றி | நிலையம் |
| பெரும்பாலோர் | கட்டணம் | எங்கணும் |
| வாய்மொழி | ஆர்வம் | அம்சம் |

1. மக்களுக்குக் கண் போன்றது கல்வி என்று பெரியோர் கூறுவர். மக்களுக்கு இன்றியமையாத உறுப்புக்களில் கண் ஒன்றாகும். கண்கள் இல்லாத ஒருவனுக்குச் செல்வம் யாவும் பயன்படாது போகின்றன. இயற்கைக் காட்சிகளைக் அவன் காண முடியாது. குருடனுக்கு உலகவாழ்க்கை இன்னதென்று தெரியாது. அதுபோலவே கல்வி

யறிவு இல்லாதவனும் அறியாமை என்ற இருளில் வாழ்கிறன்.

2. கற்றுத் தேர்ந்த பெரியோர்களால் எழுதப்பட்ட நூல்களே கல்வி கற்பதற்குத் தேவையான சாதனங்கள் ஆகும். சிறந்த நூல்களைச் சேகரித்து, ஓரிடத்தில் வைத்து, அவை யாவருக்கும் பயன்படும் வகையில் அமைக்கப்படும் நிலையமே 'நூல் நிலையம், எனப்படும். கல்வியை மக்களிடையே பரப்புவதற்கு இந்த நூல் நிலையங்களே தகுந்த சாதனங்கள்.

3. பண்டை நாட்களில் கல்வி வாய்மொழி வாயிலாகவே பரப்பப்பட்டு வந்தது. எழுத்துக்கள் தோன்றிய பின்னரே, நூல்கள் வரையப்பட்டன. வரையப்பட்ட நூல்களைக் கற்பதற்கென ஆங்காங்கே கலாசாலைகள் ஏற்படுத்தப்பட்டன. மதசம்மந்தமான நூல்களைக் கற்பிக்க ஆலயங்களிலும் மடங்களிலும் கல்வி நிலையங்கள் அமைக்கப்பட்டன. இறுதியில் அரசியலாரே கல்விச்சாலைகள் ஏற்படுத்தலாயினர். இக்கலாசாலைகளில் நூல் நிலையங்கள் நிறுவப்பட்டன.

4. அச்சு யந்திரம் தோன்றிய பின்னர் நம் நாட்டில் பல ஆயிரக்கணக்கான பழைய நூல்கள் அச்சிடப்பட்டன; பல புதிய நூல்களும் வெளியிடப் பட்டன. இந்நூல்கள்

குறைந்த விலைக்கு மக்களுக்குக் கிடைத்தன. ஆனால் நமது நாட்டு மக்களில் பெரும்பாலோருக்கு எழுதப் படிக்கத் தெரியாதபடியால், நூல் நிலையங்களை அறிஞர்கள் மட்டுமே உபயோகித்து வந்தனர்.

5. இப்பொழுது கல்வி மக்களிடையே விரைவாகப் பரவி வருகிறது; படிப்பதில் மக்களுக்கு ஆர்வம் தோன்றி யுள்ளது. இந்த ஆர்வத்தை நன்கு பயன் படுத்த வேண்டுமானால், எல்லா மக்களுக்கும் பயன்படும்படியான பல பொது நூல் நிலையங்கள் ஏற்பட வேண்டும்.

6. நூல் நிலையங்களில் பலபொருள்களைப் பற்றிய நூல்கள் காணப்பட வேண்டும். அவை எளிய நடையில் எழுதப்பட்டிருக்க வேண்டும்; ஜனங்களுடைய தாய்மொழியிலேயே அவையிருக்க வேண்டும்; படிக்கத் தெரிந்த யாவருக்கும் நூல்கள் இலவசமாக வழங்கப்படவேண்டும். ஏழைகளுக்கும் நூல் நிலையங்கள் பயன்பட வேண்டுமானால், கட்டணம் இல்லாமல் படிக்க வசதி அளிக்க வேண்டும். இவ்வாறு செய்தால், மக்கள் தங்களுடைய ஓய்வு நேரங்களை வீணாக்காமல் சிறந்த நூல்களைப் படித்து, அறிவைப் பெருக்கிக் கொள்ளக் கூடும்.

7. நூல் நிலையங்கள் படிக்கத் தெரியாதவர்களுக்கும் பயன்படவேண்டும். ஒவ்வொரு நிலையத்திலும் நன்றாகப் படிக்கக் கூடிய ஒருவரை நியமிக்க வேண்டும்; அவர் நாள்தோறும் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் சிறந்த நூல்களையும் செய்தித் தாள்களையும் பத்திரிகைகளையும் ஜனங்களுக்குப் படித்துக் காட்ட வேண்டும். படிக்கக் கேட்பதால், படிக்க வேண்டும் என்ற ஆவல் அவர்களுக்கு உண்டாகும்; அறிவும் வளரும். கல்வியின் ஒரு சிறந்த அம்சம் படிக்கக் கேட்டலேயாம்.

8. நமது நாட்டில் பண்டைக் காலத்தில் பல நூல்நிலையங்கள் இருந்தன. தக்ஷசிலம், நாளந்தா, உஜ்ஜயினி என்ற இடங்களில் சிறந்த நூல் நிலையங்கள் இருந்தன. தஞ்சையிலும் அடையாற்றிலும் பழைய நூல்கள் நிறைந்த நிலையங்கள் உள்ளன. சென்னையில் அரசியலாரின் நிர்வாகத்தில் கன்னிமாரா நூல் நிலையமும் சர்வகலாசாலையின் நிர்வாகத்தில் ஒரு நூல் நிலையமும் உள்ளன. பல கிராமங்களிலும் சிறிய நிலையங்கள் ஏற்படுத்தப் பட்டுள்ளன.

9. இம்முயற்சிகள் போதா. ஒவ்வொரு கிராமத்திலும் ஒருபொதுவான இலவச நூல் நிலையம் வேண்டும். அது எல்லாருக்கும்

பயன்படக் கூடியதாக இருக்கவேண்டும். நமது நாட்டில் காணப்படும் அறியாமையை அகற்ற இவைகளே தகுந்த சாதனங்கள். சென்னையில் இப்பொழுது நூல் நிலையங்கள் பல அமைத்து நிர்வகிப்பதற்கெனச் சட்டம் ஒன்று இயற்றியுள்ளார்கள். இச் சட்டத்தின் பயனாக நூல் நிலையங்கள் பல அமைக்கப் பட்டு,நாட்டில் எங்கணும் அறிவுச் சுடர்பரவ நாம் உதவி செய்ய வேண்டும்.

1. அரும்பொருள் :- இன்றியமையாத - இல்லாமல் முடியாத. நிலையம் - நிலை பெற்றுள்ள இடம். கலாசாலை - கலைகள் கற்கும் இடம். நிறுவப்பட்டன - அமைக்கப்பட்டன. பெரும்பாலோர் - மிகவும் அதிகமான ஜனங்கள். ஆர்வம் - ஆவல். கட்டணம் - சந்தா. எங்கணும் - எவ்விடத்திலும்.

2. கேள்விகள் :-

   1. நூல் நிலையம் என்றால் என்ன ?
   2. நூல் நிலையங்கள் ஏன் அமைக்கப்பட்டன ?
   3. கல்வி அறிவில்லாதவர்களுக்கு நூல் நிலையத்தை எவ்வாறு பயன் படுத்தலாம் ?
   4. இந்தியாவில் முன் காலத்தில் நூல் நிலையங்கள் எங்கெங்கே இருந்தன ?
   5. மக்களின் அறியாமையை எவ்வாறு அகற்றலாம் ?

3. பயிற்சி.

   1. பெரும்பாலோர், தெரிந்த, இலவசம், எளிய — எதிர்ப்பதங்களை எழுது.

2. இன்றியமையாத. அறியாமை, பெரும்பாலோர், கட்டணம், சட்டம், இயற்றி — இச்சொற்களை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுது.

3. உன் வகுப்பில் ஒரு நூல் நிலையம் அமைக்க வேண்டும் என்று உன் ஆசிரியருக்கு ஒரு கடிதம் எழுது.

4. இலக்கணம். வினைச் சொற்கள் தொழிலைக் காட்டுகின்றன; அத்துடன் அவை தொழில் நடக்கும் காலத்தையும் குறிக்கும். (உ-ம்) இந்த நூல்கள் குறைந்த விலைக்கு கிடைத்தன. இங்கே நடைபெற்றுவந்த ஒரு செயல் குறிப்பிடப் படுகிறது. ஆதலால் கிடைத்தன என்ற வினைச்சொல் இறந்த காலத்தைக் குறிக்கிறது.

இப்பொழுது நடப்பதைக் குறிக்கும் வினை நிகழ் கால வினை எனப்படும்.

(உ-ம்) இந்த நூல்கள் குறைந்த விலைக்குக் கிடைக்கின்றன.

இனிவரும் காலத்தைக் குறிக்கும் வினை எதிர் கால வினை எனப்படும்.

(உ-ம்) இந்த நூல்கள் குறைந்த விலைக்குக் கிடைக்கும்.

கூட்டம் நடந்தது—இறந்தகாலம்
கூட்டம் நடக்கிறது —நிகழ்காலம்
கூட்டம் நடக்கும் —எதிர்காலம்

பின் வரும் வாக்கியங்களிலுள்ள வினைச் சொற்களின் காலங்களை எழுது.

1. தக்ஷசிலத்தில் ஒரு நூல் நிலையம் இருந்தது.
2. சென்னையில் கன்னிமாரா நூல் நிலையம் இருக்கிறது.
3. மாத்தூரில் நாளை ஒரு நூல் நிலையம் அமைப்பார்கள்.


## 16. முகம்மது நபி

| | | |
|---|---|---|
| அவதரித்தார் | சிந்தனை | சீர்திருத்தம் |
| இறைவனடி | சீமாட்டி | கருணை |
| தியானம் | இஸ்லாம் | ஊழியம் |
| மதுபானம் | கொள்கை | உபதேசங்கள் |
| மணந்து | மதியீனம் | அறவே |

1. இந்தியாவிற்கு மேற்கே அரேபியா என்ற ஒரு நாடு உள்ளது. அந்த நாட்டிலே, மெக்கா என்ற நகரத்திலே, சுமார் ஆயிரத்து நானூறு ஆண்டுகளுக்கு முன்னர் முகம்மது நபி என்ற பெரியார் அவதரித்தார். அவர் பிறக்கு முன்னரே தமது தந்தையை இழந்தார்; பிறந்த ஆறு ஆண்டுகளில் தாயையும் இழந்தார்.

2. பெற்றோரை இழந்த முகம்மது நபியை அவருடைய சிறிய தந்தையார் வளர்த்து வந்தார். சிறியதந்தையார் ஒரு வர்த்தகர்; அவர் ஊர் ஊராகச் சென்று

வியாபாரம் செய்து வாழ்ந்து வந்தார். முகம்மது நபியும் அவருடன் கூடவே இருந்து வியாபாரத்தில் துணை புரிந்து வந்தார்.



3. சில ஆண்டுகள் கழிந்தபின், முகம்மது நபி கதீஜா என்னும் ஒரு செல்வச் சீமாட்டியிடம் வேலையில் அமர்ந்தார். அச்சீமாட்டியின் கீழ் உண்மையாக ஊழியம் புரிந்து வந்த முகம்மது நபியின் திறமையையும் உண்மையான ஊழியத்தையும் கண்ட அவ்வம்மையார் அவரையே மணந்து கொண்டார்.

4. முகம்மது நபி மதிநுட்பம் மிகுந்தவர்; ஆழ்ந்த சிந்தனை உள்ளவர். கடவுள் பக்தி மிகுந்தவர். பெருந்தன்மை, நன்ன

டக்கை, இரக்கம், கருணை ஆகிய நற்குணங்கள் நிரம்பியவர். அந்நாட்களில் அரேபிய மக்கள் பல கெட்ட பழக்கங்களை மேற்கொண்டிருந்தனர். மதுபானம் செய்தல், பொய் சொல்லுதல், திருடுதல், எளியோரைத் துன்புறுத்தல் போன்ற பழக்கங்கள் அவர்களுக்கு வழக்கமாக இருந்தன. கடவுளைப் பற்றி அவர்கள் எண்ணுவதேயில்லை. மக்களின் மதியீனத்தைக் கண்ட முகம்மது மனம் வருந்தினர்; அவர்களைச் சீர்திருத்த எண்ணம் கொண்டார்.

5. முகம்மது எப்போதும் தனிமையாக இருப்பதையே விரும்பினர். அடிக்கடி கடவுளைத் தியானம் செய்து கொண்டிருப்பார். இவ்வாறு சிந்திப்பதற்கு அவர் அருகிலிருந்த ஒரு மலைக்குகையை நாடிச்செல்வது வழக்கம். ஒரு நாள் கடவுள் அவர் முன் தோன்றி, "நீ இன்று முதல் மக்களுக்கு என் பெருமையை வளர்க்கும் நபி நாயகமாக வாழ்வாயாக!" என்று அருள் புரிந்து மறைந்தார்.

6. அன்று முதல் முகம்மது அந்நாட்டு மக்களுக்குத் தமது கொள்கைகளைப் போதிக்க ஆரம்பித்தார். "கடவுள் ஒருவரே; நாம் அவரைத் தினந்தோறும் தொழவேண்டும்; நம்மைப் படைத்துக் காப்பவர் அவரே;

நாம் எல்லோரும் அவருடைய மக்கள் ; நாம் ஒருவரோடொருவர் ஒற்றுமையுடனும் அன்புடனும் வாழவேண்டும். மதுபானம் செய்யக்கூடாது; பொய் பேசுதல், திருடுதல் முதலிய தீய பழக்கங்களை நாம் அறவே ஒழிக்க வேண்டும்" என்று அவர் போதித்தார்.

7. முகம்மது நபியின் போதனைகளைப் பலர் பின்பற்றலாயினர். ஆயினும் சிலர் அவருடைய போதனைகளை ஏற்றுக் கொள்ளவில்லை. அவர்கள் இவரைக் கொல்ல முயற்சி செய்தார்கள். இதனை அறிந்த முகம்மது நபி, ஒருநாள் நள்ளிரவில் மெக்கா நகரத்தை விட்டு மெதீனு என்ற நகரத்தை அடைந்தார். இவ்வாறு நபி நாயகம் மெக்காவிலிருந்து மெதிஞ சென்ற செய்கை ஹிஜரத் எனப்படும். முஸ்லீம்கள் ஹிஜரத்திலிருந்தே ஆண்டுகளைக் கணக்கிடுகிறார்கள்.

8. ஹிஜரத் நடந்த பதினோராம் ஆண்டில் நபி நாயகம் இறைவனடி சேர்ந்தார். மெக்கா, மெதீனு நகரங்கள் முஸ்லீம்களால் புண்ணிய நகரங்களாகக் கருதப்பட்டு வருகின்றன.

9. நபிநாயகம் ஸ்தாபித்தமதம் இஸ்லாம் எனப்படும். இஸ்லாம் என்பது சாந்தி

எனப் பொருள்படும் சொல். நபி நாயகம் அவதரித்த நாளை முஸ்லீம்கள் சிறப்புடன் கொண்டாடுகின்றனர். இந் நாளுக்கு மீலாதி நபி என்பது பெயர்.

10. முகம்மது நபியின் உபதேசங்கள் அடங்கிய நூலுக்குக் குர்-ஆன் என்பது பெயர். இதுவே முஸ்லீம்களுடைய வேதமாகும்.

1. அரும்பொருள் :- அவதரித்தார் - பிறந்தார். மணந்து - கலியாணம் செய்துகொண்டு. மதுபானம் - கள், சாராயம் முதலிய பானங்கள். மதியீனம் - புத்தியின்மை. அறவே - முற்றும். இறைவனடி - கடவுள் பாதம். வேதம் - முதல் நூல். உபதேசங்கள் - நன்மொழிகள்.

2. கேள்விகள் :-

1. முகம்மது எங்கே அவதரித்தார் ?
2. முகம்மது சிறுவயதில் யாரிடம் வளர்ந்து வந்தார் ?
3. முகம்மது யாரை மணந்து கொண்டார் ?
4. அக்கால அரேபியர் எப்படிப்பட்ட குணம் உடையவர்கள் ?
5. முகம்மதினுடைய குணவிசேடங்கள் யாவை ?
6. முகம்மது மக்களுக்கு என்ன உபதேசித்தார் ?
7. ஹிஜரத் என்றால் என்ன ?
8. ‘குர்-ஆன்’ என்பது என்ன ?

3. பயிற்சி.

1. எதிர்ப்பதங்கள் எழுது — முன்னர், தீய, எளியோர், மதியீனம், நகரம், புண்ணியம்.

2. அவதரித்தார், கருணை, மதுபானம், சீர்திருத்தம், இறைவனடி, வேதம் – இச்சொற்களை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுது.

3. கோடிட்ட இடங்களில் தகுந்த சொற்களை அமைக்க.

(1) முகமது சிற்றப்பனுக்கு வியாபாரத்தில் ——— வந்தார்.

(2) கதீஜா முகம்மதை ——— செய்து கொண்டார்.

(3) முகம்மது அரேபியரைச் ——— எண்ணம் கொண்டார்.

(4) முகம்மது அடிக்கடி கடவுளைத் ——— செய்வார்.

(5) முகம்மது தோற்றுவித்த மதத்தின் பெயர்———

4. இலக்கணம் : 1. இங்கு வந்த மனிதன் சொக்கன். என்னுடன் பேசின மனிதன் என் மாமன். இவற்றில் வந்த, பேசின என்ற சொற்கள் சொக்கன், மனிதன் என்ற பெயர்களைக் கொண்டு முற்றுப் பெறுகின்றன. இவைகளுக்கு எச்சம் என்பது பெயர். முற்றுப்பெறாத தொழிலைக் குறிக்கும் சொல் பெயர்ச் சொல்லைக்கொண்டு முடிந்தால், அது பெயர் எச்சம் எனப்படும். (உ–ம்) பாடிய பெண், சிரிக்கும் பையன், ஓடிய மாடு இவற்றில் பெயர் எச்சங்கள் எவை ?

2. ரங்கன் என்ற எழுவாயுடன் போ என்ற வினையைச் சேர்த்து மூன்று காலங்களையும் குறிக்கும் வாக்கியங்களை எழுது.

3. 1. முகம்மது குகையை நாடிச்சென்றார்.
   2. கடவுள் அருள் புரிந்தார்.
   3. கதீஜா முகம்மதை மணந்தார்.
   4. மக்கள் முகம்மதைக் கொல்லப் பார்த்தனர்.
   5. முகம்மது குகையில் ஒளிந்து கொண்டார்.

   இவ்வாக்கியங்களைக் கீழேயுள்ள கட்டத்தில் நிரப்புக.

| வாக்கியங்கள் | எழுவாய் | பயனிலை | திணை | பால் | எண் |
|---|---|---|---|---|---|
| 1. | | | | | |
| 2. | | | | | |
| 3. | | | | | |
| 4. | | | | | |
| 5. | | | | | |

## 17. ஓடிவாடா கண்ணா!

| | | |
|---|---|---|
| உள்ளங்குளிர | கற்கண்டு | புல்ல |
| தீம்பாலமுதம் | மழலை | கொஞ்சி |
| அருவி | பொன்மலர் | கள்ளன் |

1. ஓடி வாடா கண்ணா! ஓடிவாடா — என்
   உள்ளங் குளிரச் சிரித்தோடி வாடா!
   தேடிவாடா தாயைத் தேடிவாடா — கண்ணா!
   தீம்பால முதமுண்ண ஓடிவாடா!




பாடிவாடா கண்ணு ! பாடிவாடா — மலை
பாயும் அருவியைப் போற் பாடிவாடா !
ஆடிவாடா கண்ணு ! ஆடிவாடா !
ஆனந்த மயிலைப்போல் ஆடிவாடா !

2. கள்ளன் போல் ஒளியாது காணவாடா — கண்ணு!
கற்கண்டு போல் மழலை சொல்லிவாடா !
மெள்ள மெள்ள வந்து பின்னே வேடிக்கையாக —
விழிகளை மூடி விளையாட வாடா ! [என்

அள்ளியென் பிள்ளையென முத்தமிடவே —கண்ணு!
“ அம்மம்ம மொஞ்சி ” எனக் கொஞ்சி வாடா !
புள்ளிக் கலைமான் போலத் துள்ளிவாடா— கண்ணு!
பொன்மலர்க் கையால் என்னைப் புல்லவாடா !
ஓடிவாடா கண்ணு ! ஓடிவாடா — உன்
உச்சி மோந்து முத்தமுட ஓடிவாடா !

—யோகி சுத்தானந்த பாரதியார்

1. அரும்பொருள்:- உள்ளங்குளிர - மனம் குளிர. தீம் பாலமுதம்-இனிக்கும் பால்கலந்த சாதம். அருவி-சிற்ருறு. கள்ளன் - திருடன். மழலை - குழந்தையின் சொற்கள். புல்ல - தழுவ.

2. கேள்விகள் :-
 1. குழந்தை எப்படிச் சிரிக்க வேண்டும் எனத் தாய் விரும்புகிருள் ?
 2. குழந்தை எவ்வாறு ஆடிவரவேண்டும் ?
 3. குழந்தையின் மழலைச்சொல் எதைப் போன்றது ?
 4. குழந்தை எப்படிக் கொஞ்சி வரவேண்டும் ?

3. பயிற்சி:
 1. அருவி, மழலை, உச்சிமோந்து, உள்ளங்குளிர - இச் சொற்களை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுது.
 2. தாயார் குழந்தையை என்னென்ன சொல்லி அழைக்கிருள் என்று ஐந்து வாக்கியங்களில் எழுது.

4. இலக்கணம். 1. தாயார் “கண்ணு! மோகனைப் போல் நீ படி” என்ருள்: இந்த வாக்கியத்தில் பேசினது தாயார்; பேச்சைக் கேட்டது கண்ணன்; பேசப்பட்டவன் மோகன். இது ஒரு நேர் கூற்று

வாக்கியம். இதில் (1) பேசுகிறவர் (2) பேச்சை முன்னால் நின்று கேட்பவர் (3) பேசப்படுபவர் என மூவர் குறிக்கப்படுகின்றனர். இம்மூவர் இடங்களும் முறையே (1) தன்மை இடம் (2) முன்னிலை இடம் (3) படர்க்கை இடம் எனப்படும்.

நான், நாம், நாங்கள் — தன்மை இடம்
நீ, நீர், நீங்கள் — முன்னிலை இடம்
அவன், அவள், அவர், அவர்கள், அவை, செடி ஆடு, } – படர்க்கை இடம்

2. ஓடு, ஆடு, படி, குடி, அடி – இச் சொற்கள் பெயர்ச் சொற்களாகவும் வினைச் சொற்களாகவும் வருமாறு வாக்கியங்கள் அமைத்து எழுது.

## 18. தொற்று நோய்

(உரையாடல்)

| | | |
|---|---|---|
| **விக்கிவிக்கி** | **மடிகிறார்கள்** | **வைசூரி** |
| **இனுகுலேஷன்** | **கொடிய** | **உறுப்பு** |
| **மலச்சிக்கல்** | **அணுகா** | **தொற்றுநோய்** |
| **விகாரமான** | **ஜீரணம்** | **சிற்றுண்டி** |


[மாலை மணி ஐந்து. கோபு பள்ளிக்கூடத்திலிருந்து வீட்டுக்கு வருகிறான்; அவன் அழுது கொண்டே வருகிறான். ஒரு கையில் புத்தகப்பை; இடதுகையைத் தூக்கிக் கொண்டே வருகிறான்.]

கோபு:—அம்மா! அம்மா! (அழுகிறான்)

தாயார்:—கோபு! ஏன் இப்படி விக்கி விக்கி அழுகிறாய்? கீழே விழுந்து விட்டாயா? யாராவது உன்னை அடித்தார்களா?

கோபு :—இல்லையம்மா ! வலிக்கிறது அம்மா !

தாயார் :—எங்கே வலிக்கிறது ? சொல், மருந்து போடுகிறேன்.




கோபு :—(இடது கையில் ஓர் இடத்தைக் காட்டுகிறான்) இங்கே தானம்மா. இங்கே எனக்குப் பள்ளிக்கூடத்தில் குத்தினார்கள் அம்மா !

**தாயார்** :—உனக்கு மட்டுமா குத்தினார்கள்?

**கோபு** :—இல்லையம்மா! பள்ளிக்கூடத்தில் படிக்கும் எல்லாருக்கும் ஒருவர் அம்மைக் குத்தினார். அவர் அம்மை குத்துகிறவராம். நான் முன்னமேயே அம்மை குத்திக் கொண்டிருக்கிறேன் என்று அவரிடம் சொன்னேன். ஆனால் அவர் அதைக் கேட்கவில்லை; எனக்கும் குத்தி விட்டார். ஏன் அப்படிச் செய்தாரம்மா? (அழுகிறான்)

**தாயார்** :—அழாதே, கோபு. அம்மை குத்தினது நல்லதாகப் போயிற்று. ஊர் முழுதும் அம்மை என்று சொல்லுகிறார்கள். அம்மை ஒரு கொடிய நோய்; அது ஒரு தொற்று நோயும் ஆகும்.

**கோபு** :—தொற்று நோய் என்றால் என்ன? அம்மா!

**தாயார்** :—தொற்று நோய் என்பது ஒருவரிடத்துத் தோன்றிப் பல காரணங்களால் பலரிடத்தும் பரவி விடும் நோய். அம்மையும் ஒரு தொற்று நோய். அதனால் பல மக்கள் மடிகிறார்கள். பிழைப்பவர்களிற் சிலர் ஏதாவது ஒரு உறுப்பை இழந்து விகாரமான உருவை அடைகிறார்கள். அடுத்தவீட்டு அருணாசலத்தை உனக்குத் தெரியுமா?

கோபு:—தெரியும் அம்மா! அவன் முகத்தில் அநேக சிறு புள்ளிகள் இருக்கின்றன. ஒரு கண்ணில் பூ விழுந்திருக்கிறது. ஏன் அம்மா அப்படியாயிற்று?

தாயார்:—அவனுக்கு அம்மை வந்தது. கடவுள் அருளால் பிழைத்தான். ஆனல், பாவம்! ஒரு கண் குருடாகி விட்டது; முகத்திலெல்லாம் புள்ளிகள்.

கோபு:—ஏன் அம்மா, அந்த நோயால் மட்டும் இவ்வளவு கஷ்டங்கள் உண்டாகின்றன?

தாயார்;—குழந்தாய்! அது உஷ்ண தேசத்தில் வரும் ஒரு கொடிய நோய். எல்லா நோய்களைக் காட்டிலும் அது கடுமையானது. அதனல் தான் அது மிகுந்த துன்பத்தைக் கொடுக்கிறது.

கோபு:—அந்த நோய் வராமல் தடுக்க வழியில்லையா?

தாயார்:—அம்மைப்பால் குத்திக் கொள்வது தான் அது வராமல் தடுக்க வழி; அப்படி வந்தாலும் அதிகமாகத் துன்பப் படுத்தாது.

கோபு:—எனக்குத் தான் குழந்தையிலேயே அம்மை குத்தி இருக்கிறதே! இப்பொது மறு முறை ஏன் குத்தினர்கள்?

**தாயார்** :—கோபு, ஏழு வருஷங்களுக்கு ஒரு முறை அம்மைப் பால் குத்திக் கொள்ள வேண்டும். இல்லாவிடில் வைசூரி என்ற அம்மை நோய் நம்மைத் தொற்றிக் கொள்ளும்.

**கோபு** :—அம்மை குத்திக்கொண்டும் நோய் வந்து விட்டால் என்ன செய்யவேண்டும் ?

**தாயார்** :—நோயாளியை ஒரு தனி இடத்தில் படுக்க வைக்க வேண்டும். அவனுக்கு மலச்சிக்கல் இல்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். அவன் ஆடைகளை மருந்தில் நனைத்துத் துவைத்து உலர்த்தி வைக்க வேண்டும். வேப்பிலைக் காற்று அவன் மேல் வீசும்படி செய்யவேண்டும். எளிதில் ஜீரணமாகும் உணவையே அவனுக்குக் கொடுக்கவேண்டும். அவன் இருக்கும் இடம் சுத்தமாக இருக்க வேண்டும். இவ்வாறு இருப்பின் இந்நோய் பிறருக்குப் பரவாது; நோயாளியும் விரைவில் சுகமடைவான்.

**கோபு**:—வைசூரியைப் போல் வேறு தொற்று நோய்கள் உண்டா?

**தாயார்**:—உண்டு; விஜ்வரம், வாந்திபேதி, பிளேக் முதலியவை கொடிய தொற்று

நோய்களாகும். இவை பரவாமலிருக்க, நமது உடலில் மருந்து ஏற்றிக் கொள்ள வேண்டும். அவ்வாறு ஊசியினுல் மருந்து ஏற்றுவதை இனுகுலேஷன் என்று சொல்லுவார்கள். ஊரில் இந்தத் தொற்று வியாதிகள் காணப்பட்டால் உடனே நாம் இனுகுலேஷன் செய்து கொள்ள வேண்டும். அப்போது அந்நோய்கள் நம்மை அணுகா.

கோபு :—எனக்கு இது வரையில் இவை ஒன்றும் தெரியாது, அம்மா ! இன்று முதல் இனுகுலேஷன் செய்தால் நான் அழ மாட்டேன்.

தாயார் :—சரி, குழந்தாய் ! கைகால் கழுவிக் கொண்டு சிற்றுண்டி சாப்பிடவா. (இருவரும் போகிருர்கள்)

1. அரும்பொருள்:- மடிகிருர் - இறக்கிருர்கள். விகாரமான - அழகில்லாத. ஜீரணம் - உணவு சரித்தல். அணுகா - சேரமாட்டா. சிற்றுண்டி - சிறு திண்டி (உணவு.)

2. கேள்விகள் :-

   1. ஏன் அம்மைப் பால் குத்திக் கொள்ள வேண்டும் ?
   2. வைசூரியால் விளையும் கேடுகள் எவை ?

3. வைசூரி வந்தால் எப்படிச் சிகிச்சை செய்ய வேண்டும்?
4. தொற்று நோய் என்றால் என்ன?
5. வைசூரி தவிர வேறு சில தொற்று நோய்கள் எவை?
6. இனகுலேஷன் என்றால் என்ன?

3. பயிற்சி.

1. விக்கிவிக்கி, நூற்றுக்கணக்கான, விகாரம், மலச்சிக்கல், விரைவில், அணுகா — இச் சொற்களை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுது.
2. எதிர்ப்பதங்களை எழுது - கேட்கவில்லை, விகாரமான, துன்பம், வேண்டும், உண்டு, அணுகா.
3. கிராமத்தில் விஷஜுரம் பரவியிருக்கிறது என்றும், அதை உடனே கவனிக்க வேண்டும் என்றும், சுகாதார இன்ஸ்பெக்டருக்கு ஒரு கடிதம் எழுது.

4. இலக்கணம்:

1. கோபு பள்ளிக்கூடத்திலிருந்து வந்தான்.
2. கமலம் கும்மி அடித்தாள்.
3. பூங்காவனம் பூப் பறிக்கிறாள்.
4. என் அத்தை நாளைக்கு வருவாள்.
5. குதிரை வேகமாக ஓடுகிறது.
6. சங்கரன் பந்து விளையாடுவான்.

மேலேயுள்ள வாக்கியங்களில் உள்ள வினைச் சொற்களையும், அவற்றின் காலங்களையும் கீழுள்ள கட்டத்தில் எழுது.

| எண் | இறந்தகாலம் | நிகழ்காலம் | எதிர்காலம் |
|---|---|---|---|
| 1. | | | |
| 2. | | | |
| 3. | | | |
| 4. | | | |
| 5. | | | |
| 6. | | | |

## 19. அரக்கு மாளிகை

| | | |
|---|---|---|
| **விற்போர்** | **மஞ்சம்** | **சிற்பி** |
| **வாரணுவதம்** | **பிறவிக்குருடன்** | **நிகரில்லாதவன்** |
| **ஆசனம்** | **தீ** | **அத்தினபுரம்** |
| **பொருமை** | **பற்று** | **தற்செயலாக** |
| **இரை** | **பாண்டவர்கள்** | **நிர்மாணம்** |
| **திருவிழா** | **சதி** | **கௌரவர்கள்** |

1. அத்தினபுரத்தில் பாண்டவர்களும் கௌரவர்களும் ஒன்ருக வாழ்ந்து வந்தார்கள். பாண்டவர்கள் ஐவர்; கௌரவர்கள் நூற்றெருவர். குருகுமாரர்களில் துரியோதனன் முதல்வன். பாண்டவர்களில் வீமன்

மிகுந்த தேகபலம் உடையவன்; அருச்சுனன் விற்போரில் நிகரில்லாதவன். வீமனுடைய பலத்தையும் அருச்சுனனுடைய திறமையையும் கண்டு துரியோதனன் பொருமை கொண்டான்.

2. திருதராஷ்டிரன் துரியோதனனுடைய தந்தை; பிறவிக்குருடன். பாண்டவர்கள் அவனுடைய தம்பியின் மக்கள். பாண்டவர்களிடம் அவன் அன்பாயிருந்தாலும், தன் மக்களிடத்தில் அவனுக்குப் பற்று அதிகம். பொருமைகொண்ட துரியோதனன் பாண்டவர்களுக்குப் பல துன்பங்களை உண்டாக்கினன். திருதராஷ்டிரன் தன் புதல்வனைக் கண்டிக்கவில்லை. துரியோதனனுடைய கொடுமைகள் பாண்டவர்களை ஒன்றும் செய்யவில்லை.

3. அதனல் துரியோதனனுக்குப் பொருமை அதிகரித்தது. பாண்டவர்களை எவ்வகையிலாயினும் கொன்று விடவேண்டும் என்று நிச்சயித்தான். வாரணவதம் என்ற நகரில் நேர்த்தியான ஒரு மாளிகையைக் கட்டினன். ஆனல் அம்மாளிகை சணல், மெழுகு, எண்ணெய், அரக்கு முதலியவைகளுடன் மண்ணைக் கலந்து நிர்மாணிக்கப்பட்டது. சுவர்களின்மேல் பூசிய மேல் பூச்சும் எளிதில் தீப்பிடிக்கக்கூடியதாக இருந்தது. அங்கங்கே தீப்

பற்றிக் கொள்ளக்கூடிய பொருள்கள் பல வைக்கப்பட்டிருந்தன. ஆனால் வெளிக்கு இந்த ஏற்பாடுகள் ஒன்றும் புலப்படவில்லை. மனத்தைக்கவரும் ஆசனங்களும் மஞ்சங்களும் அங்கங்கே வைக்கப்பட்டிருந்தன. மாளிகையில் எல்லா வசதிகளும் இருந்தன.

4. துரியோதனன் பாண்டவர்கள் வசிக்கவென்றே அம்மாளிகையை அமைத்தான். அவர்கள் அங்கே சிலகாலம் வாழ்ந்து வரும்போது ஒரு நாள் அதற்குத் தீ வைத்து விட ஏற்பாடுகள் செய்ய எண்ணினான். பாண்டவர்கள் தற்செயலாகத் தீக்கு இரையானார்கள் என்று யாவரும் நம்பவேண்டும் என்று துரியோதனன் தீர்மானித்தான்.

5. அச் சமயம் வாரணாவதத்தில் சிவபெருமானுக்கு ஒரு திருவிழா நடத்த ஏற்பாடாகி இருந்தது. அத்திருவிழாவைக் காணப் பாண்டவர்கள் விரும்பினார்கள். 'பழம் நழுவிப் பாலில் விழுந்தது' என்று துரியோதனன் ஆனந்தம் அடைந்தான். பாண்டவர்களும் தமது தாயாராகிய குந்தியுடன் வாரணாவதம் சென்றார்கள்.

6. துரியோதனனுடைய சதி சிற்றப்பனாகிய விதுரனுக்குத் தெரிந்தது. அவன் ஒரு கைதேர்ந்த சிற்பியை அரக்கு மாளி

கைக்கு அனுப்பி, அங்கிருந்து இரகசியமாகத் தப்பித்துக்கொண்டு வெளியேறுவதற்கு ஒரு சுரங்கவழியைக் கட்டி முடித்தான். பாண்டவர்கள் வாரணவதம் செல்லுவதற்கு முன் விதுரனிடம் விடைபெற்றுக் கொள்ளச் சென்றார்கள். அப்பொழுது அச் சுரங்கவழியைப் பாண்டவர்களுக்கு அவன் தெரிவித்தான்.

7. வாரணவதம் சென்ற பாண்டவர்கள் அரக்கு மாளிகையை அடைந்தார்கள். அவர்களுக்குத் துணையாகத் துரியோதனன் புரோசனன் என்றொருவனை அனுப்பினான். அவனும் பாண்டவர்களுடன் அரக்கு மாளிகையில் வாசம் செய்துவந்தான். பாண்டவர்கள் வெகு கவனத்துடன் இரவு பகல் தூக்கம் இல்லாமல் அங்கே வசித்து வந்தார்கள். இவ்வாறு ஒரு ஆண்டு முடிந்தது.

8. ஒரு நாள் 'இன்று மாளிகைக்குத் தீ வைத்து விடவேண்டும்' என்று புரோசனன் முடிவு செய்தான். அவனுடைய கருத்தை வீமன் எவ்வாறோ அறிந்து கொண்டான். நள்ளிரவில் வீமனே வீட்டின் பல பாகங்களுக்குத் தீ வைத்து விட்டான். பாண்டவர்களும் குந்தியும் சுரங்கத்தின் வழியாக அரக்கு மாளிகையை விட்டு வெளியேறினர்

கள். தீ வீட்டை நாலாபக்கங்களிலும் சூழ்ந்து கொண்டது. புரோசனன் இருந்த



இடமும் தீப்பிடித்துக் கொண்டது. மாளிகை எரிந்து சாம்பலாயிற்று. புரோசனனும் தீக்கு இரையானுன். வாரணுவத மக்கள் பாண்டவர்கள் மடிந்தார்கள் என்று வருந்தி ஞர்கள்; அத்தினபுரத்திற்குச் செய்தி அனுப்பிஞர்கள். துரியோதனன் அச்செய்தியைக் கேட்டு உளமகிழ்ந்தான். பாவம்! அவன் சதி பலிக்கவில்லை என்று அவன் உணரவில்லை.

1. அரும் பொருள் :- நிகரில்லாதவன் - சமானமில்லாதவன். பற்று - பிரியம். நிர்மாணம் - அமைப்பு. மஞ்சம் - கட்டில். ஆசனம் - உட்காரும் பலகை. சிற்பி — சிற்பவேலை செய்பவன். தீ - நெருப்பு. இரை — ஆகாரம். சதி - இரகசிய ஏற்பாடு.

**2. கேள்விகள்:-**

1. துரியோதனன் பாண்டவர்களிடம் ஏன் பொறாமை கொண்டான் ?
2. துரியோதனன் அரக்கு மாளிகையை எங்கே, ஏன் கட்டினான் ?
3. அரக்கு மாளிகை எதனால் கட்டப்பட்டது ?
4. பாண்டவர்கள் எதற்கு வாரணாவதம் சென்றார்கள் ?
5. அரக்குமாளிகையில் சுரங்க வழியைச் செய்வித்தது யார் ?
6. பாண்டவர்கள் அரக்கு மாளிகையிலிருந்து எவ்வாறு வெளியேறினார்கள் ?
7. துரியோதனன் எதை உணரவில்லை ?

**3. பயிற்சி.**

1. எதிர்ப்பதங்கள் என்ன ? — நிகரில்லாதவன், ஒன்றாக, தெரிவித்தான், வெளியேறினார்கள்.
2. சதி, தற்செயலாக, திருவிழா, தீ, இரை, பொறாமை – இச்சொற்களை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுது.
3. எரி – எறி, இரை - இறை, கரை – கறை, மரை – மறை, அரம் – அறம்: இச் சொற்களின் பொருள்களை எழுது.

**4. இலக்கணம்.**

1. நீங்கள் வாரணாவதம் செல்லுங்கள்.
2. பீமா ! நீ என்னுடன் கூட வா.
3. பாண்டவர்கள் அரக்கு மாளிகைக்குப் போனார்கள்.

031,6(ம) N50
சென்னை-600 008.
139586

4. விதுரன் நல்லவன்.
5. நான் பாண்டவர்களுடன் இருப்பேன்.
6. அரக்கு மாளிகை எளிதில் தீப்பற்றிக் கொள்ளும்.

மேலேயுள்ள வாக்கியங்களில் உள்ள பெயர்களுக்கு இடங்களை எழுது.

| எண் | தன்மை | முன்னிலை | படர்க்கை |
|---|---|---|---|
| 1. | | | |
| 2. | | | |
| 3. | | | |
| 4. | | | |
| 5. | | | |
| 6. | | | |

## 20. என் கதை (கங்கை நதி)

| | | |
|---|---|---|
| தலம் | சாதனை | ஒன்றுபடுகிறேன் |
| அருந்தவம் | அஹிம்சாமூர்த்தி | சடைமுடி |
| நிரந்தரமாக | வலம்வந்து | அரியணை |
| புனித அஸ்திகள் | ஓதுகின்றன | திருவிளையாடல் |
| வளமை | தருமபத்தினி | பரவசம் |
| திருக்கயிலாயம் | அரவம் | பாதகமலங்கள் |
| அண்ணல் | வாழ்நாள் | வியப்பு |


1. இந்தியாவின் வடக்கேயுள்ள இமய மலையில் கங்கோத்ரி என்ற தலத்தின் அருகில்

நான் பிறந்தேன். நான் பிறந்த இடத்தில் எப்பொழுதும் உறைபனி இருந்து கொண்டே இருக்கும். பனிக்கட்டி உருகி நான் ஒரு சிறு ஓடையாக முதலில் காட்சி அளிக்கிறேன்.



கங்கோத்ரி கடல் மட்டத்திற்குப் பதினுலாயிரம் அடி உயரத்தில் இருக்கிறது. நான் சிவபெருமானுடைய சடைமுடியில் உள்ளேன் என்று நம்து புராணங்கள் ஓதுகின்றன. அது உண்மைதான். ஏனெனில் திருக்கயிலாயம் என்ற சிவபெருமானுடைய உறைவிடம் இமயமலேயின் மேல்தான் இருக்கிறது. சிவபெருமானுக்குக் கங்காதரன் என்ருெரு பெயர் வழங்குகிறது அல்லவா? அதற்கு நான்தான் காரணம்.

2. கங்கோத்ரியிலிருந்து நான் சம வெளியை நோக்கிப் பாய்கிறேன். அக் காட்சி நான் ஆகாய வெளியிலிருந்து பூமிக்கு வருவது போல் இருக்கும். பகீரதன் என்ற மன்னன் சிவபெருமானை நோக்கிப் பல்லாண் டுகள் கடுந்தவம் புரிந்தான். அவன் என்னை வேண்டியே விரதம் இருந்தான். சிவபெரு மான் அவன் நிலைக்கு இரங்கினார். அவனுக்கு



என்ன வேண்டும் என்று வினவினார். தன் னைப் பூலோகத்திற்கு அனுப்பவேண்டும் என்று அவன் கோரினான். சிவபிரான் அவ் வாறே என்னைச் சடைமுடியினின்றும் அவிழ்த்து விட்டார். நான் ஆனந்தமாகப் பூவுலகில் பாய்ந்தேன். பகீரதனுடைய சாதனை

யினால் நான் மண்ணுலகு அடைந்ததால், தேவப்பிரயாகை என்ற இடம் வரையில் எனக்குப் பாகீரதி என்பது பெயர். பகீரதனுடைய செயலினால் மக்களுடைய மனத்தில் நான் நிரந்தரமாகக் குடிகொண்டுள்ளேன்; எளிதில் செய்ய முடியாத காரியத்தை ஒருவன் செய்யும்பொழுது அதைப் பகீரதப் பிரயத்தினம் என்று உலகோர் கூறுகின்றனர்.

3. தேவப்பிரயாகை என்ற விடத்தில் எனக்கு ஒரு சகோதரி தோன்றுகிறாள்; அலகநந்தம் என்பது அவளுடைய பெயர். இவ்விடத்திலிருந்து எனக்குக் கங்கை எனப் பெயர் வழங்கி வருகிறது. பிரயாகை என்ற விடத்தில் யமுனா என்னுடன் கலந்து உறவாடுகிறாள். யமுனை ஆதியில் கண்ணபிரான் பல திருவிளையாடல்கள் புரிந்த நதி; யமுனையில் காளிங்க மடுவில் வாழ்ந்து வந்த காளிங்கன் என்ற கொடிய விஷம் கொண்ட அரவத்தைக் கண்ணன் விளையாட்டைப்போல் கொன்றானல்லவா? புண்ணியவதியான யமுனை என்னை அடைவதில் எனக்கு மிகப் பெருமை. எங்களுடன் இங்கே சரசுவதியும் தரைக்கு அடியிலே சேர்ந்து கொள்கிறாள். ஆனால் அவள் உலகோர்க்குக் காட்சி அளிப்பதில்லை. நாங்கள் மூவரும் கூடி விளையாடும்

இடம் திரிவேணி எனப்படும். திரிவேணியி லிருந்து யமுனையுடன் விளையாடிக்கொண்டே செல்லுவதால், என் வேகம் குறைகிறது; ஆனால் ஆழம் அதிகரிக்கிறது.

4. காசி, அயோத்தி, பிரயாகை என்ற பழமையான புண்ணிய நகரங்கள் பல என் கரையில் அமைந்துள்ளன. சமவெளியைத் தாண்டி நான் வேகமாகச் சென்று சமுத்திர ராஜனுடன் ஒன்றுபடுகிறேன். சமவெளியில் என்னுடன் பல சிறு சகோதரிகளான சிற்றாறுகள் சேர்ந்து கொள்கின்றன. நான் பாயும் பிரதேசம் நிலவளம் நீர்வளம் மிகுந்தது. என்னால் பல வயல்கள் செழிப்படைகின்றன. வயல்களுக்கு நீர்ப்பாசன வகையில் நான் பெரும் உதவி செய்கிறேன். சமவெளியிலுள்ள மக்கள் என்னுடைய உதவியால் ஏராளமான தானியவகைகளை உற்பத்தி செய்கிறார்கள்.

5. நான் கடலில் கலப்பதற்கு முன் சமுத்திரராஜனை வலம் வந்து வணங்குகிறேன். அவர் என்னை ஆட்கொள்ளும் தெய்வம் அல்லவா? அதனால் நான் பல பிரிவுகளாகப் பிரிந்து போகிறேன். என்னால் அவ்விடம் மிகுந்த வளமை பெறுகிறது, அவ்விடங்களில் தேன்கூண்டை நாடும்

தேனீக்களைப்போல் மக்கள் என்னை நாடி நெருங்கி வாழ்கிறார்கள். மக்கள் என்னைத் தோணிகளாலும் படகுகளாலும் கடந்து செல்கிறார்கள். நான் என்றும் நீர் வற்றிப் போவதில்லை. ஆதலால் என்னை இவ்வாறு பயன்படுத்திக் கொள்ள இயலுகிறது.



6. என் கரையில் பல திரு விழாக்கள் நடைபெறுகின்றன. ஹரித்துவாரத்தில் பன்னிரண்டு ஆண்டுகட்கு ஒரு முறை கும்ப மேளா என்ற திருவிழா நடைபெறுகிறது, அதைக் காணப் பல்லாயிர மக்கள் என்னை நாடி வருவார்கள். மக்கள் என்னை வணங்கி என்னிடத்தில் நீராடிப் பாவங்களைப்போக்கிக்

கொள்கிறார்கள். காசியில் விசுவேசுவரனு டைய பாதகமலங்களைப் பணிந்து பிரயாகை என்ற அலகாபாத் அடைகிறேன்.

7. என் உள்ளத்தைக் கொள்ளை கொண்ட நகரம் பிரயாகையே. ஏன் என்று அறி வீர்களா? மன்னன் மோதிலால் அந்நகரில் வாழ் ந்து மறைந்தார். அன்னாருடைய அருந்தவப் புதல்வன், மனிதருள் மாணிக்கம், அருமை ஜவாஹர்லால் தோன்றிய தலம் பிரயாகை அல் லவா? அவர் வாழ்ந்த மாளிகை, ஆனந்தபவ னம், இன்று என் அன்னை இந்தியாவின் பொதுச் சொத்து அல்லவா? என் கரையின் மீது விளையாடிய சிறுவன் ஜவஹர்லால் காண்போர் வியக்கும் வண்ணம் அரியணையின் மீதமர்ந்து ஆட்சி செலுத்துகிறான்.

8. இது மட்டுமல்ல. என் அன்னையின் தந்தையும், அவருடைய தருமபத்தினியும் திரிவேணியில் என்னுடன் கலந்து இருக்கி றார்கள். அஹிம்ஸா மூர்த்தி, அண்ணல் காந்தி யடிகளின் புனித அஸ்திகளையும் அவருடைய மனைவியார் கஸ்தூரிபாயின் புனித அஸ்தி களையும் நான் தாங்கி நிற்கிறேன். அவர்கள் மறைந்தது உங்களுக்கு ஈடுசெய்ய முடியாத நஷ்டம்; ஆனால் எனக்கு அதில் தாங்க முடி யாத பெருமை! அன்று, திரிவேணியில், அண்

ணலின் அஸ்திகள் என்னைச் சேர்ந்த சமயம் தந்தைக்கு அடிபணிந்து நின்ற பல்லாயிர மக்களைக் கண்டு நான் பரவசம் அடைந்தேன். என் வாழ்நாளில் இத்தகைய காட்சியை நான் கண்டதில்லை.

9. இவ்வகைப் பெருமை வாய்ந்த என்னை மக்கள் போற்றி வணங்குவதில் வியப்புத்தோன்றுகிறதா? நான் யார் என்று தெரிந்ததா? நான்தான் கங்கை நதி.

1. அரும் பொருள்:- தலம் - இடம். நிரந்தரமாக - என்றென்றும். அரவம் - பாம்பு. (சப்தம் என்றும் பொருள்படும்.) வளமை - செழுமை. அரியணை - அரசன் கொலுவிருக்கும் இடம். புனித அஸ்திகள் - மேன்மையான எலும்பும் சாம்பலும் அண்ணல் - பெருமை பொருந்திய.

2. கேள்விகள் :-

1. கங்கை எங்கே உற்பத்தியாகிறது?
2. சிவபெருமான் சடைமுடியிலிருந்து கங்கை ஓடிவருகிறது எனச் சொல்லுவது எவ்வாறு பொருந்தும்?
3. யமுனையின் பெருமைக்குக் காரணம் என்ன?
4. கங்கை மக்களுக்கு எவ்வாறு உதவுகிறது?
5. கங்கையின் உள்ளத்தைக் கொள்ளை கொண்ட நகரம் எது? ஏன்?
6. கங்கைக்கு எதனால் தாங்கமுடியாத பெருமை?

3. பயிற்சி.

1. சரியாகப் பொருத்தி எழுது :

| | |
|---|---|
| கங்கை உற்பத்தியாகும் இடம் | காசி |
| யமுனையும் சரஸ்வதியும் கங்கயுடன்கலக்கும்இடம் | கும்பமேளா |
| கங்கைக் கரையிலுள்ள புனித நகரம் | கங்கோத்ரி |
| கங்கைக் கரையில் நடக்கும் திருவிழா | திரிவேணி |

2. இன்று காலையிலிருந்து நீ செய்த காரியங்களை நீயே சொல்லுகிறபடி ஒரு கதை போல் எழுது.

4. இலக்கணம். பொருத்தமான எழுவாய் பயனிலைகளைக் கோடிட்ட இடங்களில் அமைக்கவும்.

1. கங்கை சமவெளியில் ———
2. பகீரதன் கங்கையைக் ———
3. கண்ணன் காளிங்கமடுவில் ———
4. ——— என்ற திருவிழா கங்கைக்கரையில் நடக்கிறது.
5. ——— திரளாகக்கூடி கங்கையில் மூழ்குவார்கள்.

# 21. ஊருக்கு நல்லது



| | | | |
|---|---|---|---|
| சீர் | உய்வது | முரசு | வையம் |
| நிகர் | மாந்தர் | மாண்பு | நானிலம் |

1. ஊருக்கு நல்லது சொல்வேன்—எனக்
குண்மை தெரிந்தது சொல்வேன் ;
சீருக் கெல்லாம் முதலாகும்—ஒரு
தெய்வம் துணைசெய்ய வேண்டும்.

2. சாதிக் கொடுமைகள் வேண்டாம்—அன்பு
தன்னிற் செழித்திடும் வையம் ;
ஆதரவுற்றிங்கு வாழ்வோம்—தொழில்
ஆயிரம் மாண்புறச் செய்வோம்.

3. தெய்வம் பலப்பல சொல்லிப்—பகைத்
தீயை வளர்ப்பவர் மூடர் ;

உய்வதனைத்திலு மொன்ருய்—எங்கும்
ஓர் பொருளானது தெய்வம்.

4. அன்பென்று கொட்டு முரசே—மக்கள்
அத்தனைபேரும் நிகராம்;
இன்பங்கள் யாவும் பெருகும்—இங்கு
யாவரு மொன்றென்று கண்டால்.

5. ஒன்றென்று கொட்டு முரசே—அன்பில்
ஓங்கென்று கொட்டு முரசே;
நன்றென்று கொட்டு முரசே—இந்த
நானில மாந்தருக் கெல்லாம்.

—சுப்ரமணிய பாரதியார்

1. அரும்பொருள் :- சீர் - நல்ல நிலைமை. வையம் - பூமி. மாந்தர் - மக்கள். முரசு - கொட்டப்படும் ஒரு வகைத்தோற்கருவி.

2. கேள்விகள்:-
   1. உலகில் நாம் எவ்வாறு வாழ வேண்டும்?
   2. மூடர் பகைமையை எப்படி வளர்க்கிருர்கள்?
   3. உலகில் இன்பம் எப்பொழுது பெருகும்?
   4. உலகமக்கள் அறிந்து கொள்ள வேண்டியது என்ன?

3. பயிற்சி.
   1. இப்பாடலின் கருத்தை மூன்று வாக்கியங்களில் எழுது.
   2. கோடுள்ள இடங்களில் நிறுத்தக் குறிகளை இடு.

பாரதியார்/சிறந்த தமிழ்ப்புலவர்/அவர் எட்டய புரத்தில் பிறந்தார்/அவருக்கு நாட்டுப்பற்று அதிகமாக இருந்ததால்/நாட்டுப்பற்று மிகுந்த பல பாடல்களைப் பாடினார்/பாரதியாருக்கு நினைவுச்சின்னம் உண்டா/ஆம்/ உண்டு/எட்டயபுரத்தில் ஒரு மண்டபமே அவருடைய நினைவுச் சின்னம்/பாரதியார் பாட்டைப் பாடினால்/ அழும் குழந்தையும் ஆகா/என்று வியப்பு அடையும்/

## 22. பேராசையின் விளைவு

(ஒரு சிறு நாடகம்)

| | | |
|---|---|---|
| வயற்புறம் | இளைப்பாறலாம் | தொலைவு |
| நெடுந்தூரம் | ஆகாரம் | கனவான் |
| பிரயாணம் | வறள்கிறது | ஐயன்மீர் |
| தருமம் | அரிந்து | நியாயம் |
| நன்றி | பரிசு | மன்னித்து |
| சச்சரவு | வஞ்சனை | தீர்ப்பு |

காட்சி 1. காலம்-காலைநேரம்.

[கந்தனும் சோமனும் வயற்புறங்களின் வழியே நடந்து போகிறார்கள். நெடுந்தூரம் பிரயாணம் செய்த களைப்பு. ஒரு வயலில் ஒரு வெள்ளரித் தோட்டம்; அதில் பழங்கள் பல இருந்தன; அவற்றைக்கண்டு உண்ண விரும்புகிறார்கள்.]

கந்தன்—சோமா! நெடுந் தூரம் நடந்து வந் திருக்கிறோம். பசியோ காதுகளை அடைக்கிறது; கால்கள் தள்ளாடுகின்

றன ; நிலை தடுமாறுகிறது. சற்று இங்கே இளைப்பாறலாமே !

**சோமன்**—அவ்வாறே செய்யலாம், கந்தா ! எனக்கும் பசி தாங்க முடியவில்லை. ஆகாரம் ஒன்றும் காணவில்லையே ! என்ன செய்யலாம் !

**கந்தன்**—சோமா ! அதோ அங்கே ஒரு வெள் ளரித் தோட்டம் இருக்கிறது. அங்கே போகலாம் வா. (போகிறார்கள்)

**சோமன்**—(தோட்டத்துக்கு அருகில் வந்ததும்) கந்தா ! பார்த்தாயா ? இத் தோட்டத் தில் பல பழங்கள் இருக்கின்றனவே ! இவற்றை வாங்கி உண்ணலாமே !

**கந்தன்**—அப்படியே செய்வோம். தோட்டக் காரன் எங்கே ?

**சோமன்**—ஐயா ! தோட்டக்காரரே ! தோட் டக்காரரே ! (உரக்கக் கூப்பிடுகிறான்)

(தோட்டக்காரன் வருகிறான்.)

**தோட்டக்காரன்**—என்ன வேண்டும், ஐயா ? ஏன் கூப்பிட்டீர்கள் ?

**கந்தன், சோமன்**—அண்ணே ! பசி காதடைக்கி றது ; நாவறள்கிறது. விலைக்கு வெள் ளரிப் பழங்கள் தருகிறாயா ?

தோட்டக்காரன்—அதற்கென்ன? நல்ல பழங்களாகக் கொடுக்கிறேன். பெற்றுக் கொண்டு உண்டு பசியாறுங்கள்.

கந்தன்—எனக்கு ஐந்து பழங்கள் கொடு. (பணம் கொடுத்துப் பெறுகிருன்.)

சோமன்—எனக்கு மூன்று பழங்கள் கொடு. (பணம் கொடுத்துப் பெறுகிருன்.)

[பழங்களைப் பெற்ற இருவரும் சாலையின் அருகே சற்றுத் தொலைவில் இருந்த ஒரு ஆலமரத் தடியில் உட்காருகிருர்கள். எதிரே குளம். இருவரும் பழங்களை உண்ணத் தொடங்கினுர்கள்.]

காட்சி 2. காலம் - நண்பகல்

[சற்றுத் தொலைவில் குளம்பு ஓசை கேட்கிறது. குளத்தங் கரையில் ஒரு குதிரை வந்து நிற்பதைக் கந்தனும் சோமனும் கண்டார்கள். குதிரையினின்று பட்டாடைகள் தரித்த கனவான் ஒருவர் இறங்கினுர். கனவான் அவர்கள் அருகே வந்தார்.]

கந்தன், சோமன்—ஐயா! வணக்கம்.

கனவான்—வணக்கம், ஐயன்மீர்!

கந்தன்—ஐயா! நாங்கள் இப்பழங்களை உண்ணப் போகிருேம். தாங்களும் பசியுடன் இருக்கிறீர்கள். எங்களுடன் தாங்களும் உண்ண விரும்புகிருேம்.

சோமன்—நானும் அவ்வாறே விரும்புகிறேன், ஐயா!

கனவான்—உங்கள் இருவருக்கே இப்பழங்கள் போதாது போல் இருக்கிறதே! பரவா யில்லை. நான் சற்று இளைப்பாறுகிறேன். நீங்கள் சாப்பிடுங்கள்.

கந்தன்—மூவருக்கும் போதும். தயவு செய்து உண்ண வாருங்கள். நீங்கள் பசித்திருக்க நாங்கள் உண்ணலாமா? அது தருமம் அல்லவே.

கனவான்—சந்தோஷம். மூவரும் உண்ணலாம் வாருங்கள்.



[கந்தன் தன் பழங்கள் ஒவ்வொன்றையும் மூன்று பாகங்களாகச் செய்கிறான். சோமனும் அவ்வாறே செய் கிறான். மூவரும் அருந்துகின்றனர்.]

சோமன்—ஆகா ! என்ன ருசி ! இந்தப் பசி வேளைக்கு இப்பழங்கள் அமிர்தம் போல் இருக்கின்றனவே!

கனவான்—ஆமாம்! இவை மிகுந்த சுவையுள்ள பழங்கள். உங்களுக்கு என் நன்றி; இதை என் ஆயுள் உள்ளளவும் மறவேன். இந்தாருங்கள். என் திருப்திக்காக இந்த வெகுமதியைப் பெற்றுக் கொள்ளுங்கள். (எட்டு ரூபாய்களைக் கொடுக்கிறார்.)

கந்தன், சோமன்—ஐயா! இச்சிறு உதவிக்குப் பணம் எதற்கு ? வேண்டாம். எங்களைத் தாங்கள் மறவாதிருக்க வேண்டுகிறோம். அதுவே எமக்கு வெகுமதி.

(திருப்பிக் கொடுக்கிறார்கள்.)

கனவான்—நண்பர்களே ! வைத்துக் கொள்ளுங்கள். என் நினைவாக அதை அளித்துள்ளேன். வணக்கம். போய்வருகிறேன். (குதிரை ஏறிச் செல்கிறார்.

## காட்சி 3

சோமன்—இதை நாம் இருவரும் பங்கிட்டுக் கொள்ளலாம்.

கந்தன்—சரி நண்பா. இந்தா! உன் மூன்று பழங்களுக்கு மூன்று ரூபாய்கள். எனக்கு மிகுதியான ஐந்து ரூபாய்கள்.

சோமன்—கந்தா! இது சரியன்று. என்னை ஏமாற்ருதே. இருவரும் சமமாகப் பங்கிட்டுக்கொள்வோம்.

கந்தன்—சோமா! உனக்குப் பேராசை பிடித்துவிட்டது. உன் பழங்கள் மூன்று. அதற்கு மூன்று ரூபாய்களே சரியான பங்கு ஆகும். அதிக ஆசை கொள்ளாதே.

சோமன்- முடியாது. எனக்கு ரூபாய் நான்கு கொடு.

கந்தன்—மாட்டேன். வா. அடுத்த ஊரிலுள்ள நீதிபதியிடம் போகலாம். அவர் நமது சச்சரவைத் தீர்த்து வைப்பார்.

சோமன்—அப்படியே! வா போகலாம்.

(இருவரும் போகிருர்கள்.)


## காட்சி 4. காலம் - மாலைநேரம்

[நியாயஸ்தலம். நீதிபதி. கந்தன், சோமன்]

நீதிபதி—கந்தா! சோமா! உங்கள் வழக்கு யாது?

கந்தன்—ஐயா! ஒரு கனவானுக்கு நாங்கள் உண்ணப் பழங்கள் அளித்தோம். என்னிடம் ஐந்து வெள்ளரிப்பழங்களும் சோமனிடம் மூன்றும் இருந்தன. ஒவ்வொன்றையும் மூன்று மூன்ருக அரிந்து மூவரும் உண்டோம். கனவான் எட்டு

ரூபாய் பரிசு அளித்தார். அதில் சோம னுக்கு மூன்று ரூபாய் அளித்தேன். அவன் சரி பாதிசேர வேண்டும் என் கிருன்.



**நீதிபதி**—சோமா! மூன்று ரூபாய் பெற்றுக் கொள்ள உனக்கு மனம் இல்லையா?

**சோமன்**—இல்லை ஐயா! எனக்குச் சரி பாதிப் பணம் வேண்டும். தாங்களே தீர்ப்புச் சொல்லுங்கள்.

**நீதிபதி**—சந்தோஷம். (ஏழு ரூபாய்களைக் கந்தனிடம் கொடுக்கிருர்) சோமா! பெற்றுக்கொள். (மீதி ஒரு ரூபாயைச் சோமனிடம் கொடுக்கிருர்.)

**சோமன்**—ஐயா! இது என்ன தீர்ப்பு? கந்தனே எனக்கு மூன்று ரூபாய் கொடுத்தானே

தாங்கள் ஒரு ரூபாய் மட்டும் கொடுக்கிறீர்களே? இது நியாயம் அல்லவே. தாங்கள் வஞ்சனை செய்கிறீர்கள்.

**நீதிபதி**—இது வஞ்சனை யல்ல; நியாயமே ஆகும். மூன்று பழங்கள் உன்னுடையவை; கந்தனுடையது ஐந்து. மொத்தம் இருபத்துநான்கு துண்டுகள் ஆயின. நீங்கள் மூவரும் ஆளுக்கு எட்டுத் துண்டுகள் உண்டீர்கள். நீயும் எட்டுத்துண்டுகள் அருந்தினாய்; உன் பழங்களில் மீதி ஒரு துண்டுதான். அதை அச் செல்வர் உண்டார்; மிகுந்த ஏழு துண்டுகள் கந்தனுடையவை. அவர் உண்ட எட்டுத் துண்டுகளுக்கு எட்டு ரூபாய்கள் கொடுத்தார். அதில் உனக்கு ஒரு துண்டுக்கு ஒரு ரூபாய்; கந்தனுடைய ஏழுதுண்டுகளுக்கு ஏழு ரூபாய்கள். இப்பொழுது தெரிந்ததா ?

**சோமன்**—தெரிந்தது ஐயா! தங்கள் தீர்ப்பு நியாயமே. (தனக்குள்) பேராசையால் மோசம் போனேன்; இனிப்பேராசை கொள்ளேன். (வெளிப்படையாக) கந்தா ! என்னை மன்னித்து விடு.

(இருவரும் போகிறார்கள்.)

**1.** அரும்பொருள் :-

நெடுந்தூரம் - மிகத் தொலைவு. ஆகாரம் - உணவு. வறள்கிறது - வறட்சி அடைகிறது. சச்சரவு - சண்டை. அரிந்து - அறுத்து. பரிசு - வெகுமதி.

**2.** கேள்விகள் :-

1. கந்தனும் சோமனும் வெள்ளரித் தோட்டத்திற்கு ஏன் சென்றார்கள்?
2. அவர்களுடன் யார் உணவு அருந்தியது ?
3. கனவான் அளித்த வெகுமதி என்ன ?
4. கந்தனும் சோமனும் ஏன் சண்டை போட்டார்கள் ?
5. நீதிபதியின் தீர்ப்பு என்ன ?
6. சோமன் எவ்வாறு மோசம் போனான் ?

**3.** பயிற்சி.

1. எதிர்ப்பதங்களை எழுது : - தருமம், சச்சரவு, நியாயம், கொள்ளேன், மறவேன், போதாது.
2. இச்சிறு நாடகத்தைக் கதை உருவில் எழுது.

**4.** இலக்கணம். கீழுள்ள வாக்கியங்களில் காலத்தைத் திருத்து -

1. கனவான் நேற்று இங்கே வருவார்.
2. கந்தனுக்கு நாளைக்குக் கலியாணம் நடந்தது.
3. நீதிபதி நேற்று தீர்ப்பு அளிப்பார்.
4. இன்று நான் மங்களூர் சென்றேன்.
5. நாளைக்கு நாங்கள் இந்தக் கதையை நடித்தோம்.

# 23. செய்யுள் பாடம்

## தமிழ் மொழி வாழ்த்து

1. வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ் மொழி
வாழிய வாழியவே !
வான மளந்த தனைத்தும் அளந்திடு
வண்மொழி வாழியவே !
2. ஏழ்கடல் வைப்பினும் தன்மணம் வீசி
இசை கொண்டு வாழியவே !
எங்கள் தமிழ் மொழி எங்கள் தமிழ்
என்றென்றும் வாழியவே ! [மொழி

—பாரதியார்

## 2. நறுந் தொகை

தேம்படு பனையின் திரள்பழத்து ஒரு விதை
வான் உற ஓங்கி வளம்பெற வளரினும்
ஒருவர்க்கு இருக்க நிழலாகாதே.
தெள்ளிய ஆலின் சிறுபழத்து ஒரு விதை
தெண்ணீர்க்கயத்துட் சிறுமீன் சினையினும்
நுண்ணிதே ஆயினும் அண்ணல் யானை
அணிதேர் புரவி ஆட்பெரும் படையொடு
மன்னர்க்கு இருக்க நிழலாகும்மே.

## 3. வெற்றிவேற்கை

கற்கை நன்றே கற்கை நன்றே;
பிச்சைப்புகினும் கற்கை நன்றே.
கல்லா ஒருவன் குலநலம் பேசுதல்

நெல்லினுள் பிறந்த பதராகும்மே.
எக்குடிப் பிறப்பினும் யாவரே ஆயினும்
அக்குடியில் கற்றோரை வருக என்பர்.

—அதிவீரராம பாண்டியர்

## 4. மூதுரை

### 1. செய்த உதவிக்குப் பயன் எதிர்பாராதே.

நன்றி ஒருவற்குச் செய்தக்கால் அந்நன்றி
'என்று தருங்கொல்!' என வேண்டா-நின்று
தளரா வளர்தெங்கு தாள்உண்ட நீரைத்
தலையாலே தான்தருத லால்.

### 2. நல்லவர்க்கு உதவு

நல்லார் ஒருவற்குச் செய்த உபகாரம்
கல்மேல் எழுத்துப்போல் காணுமே-அல்லாத
ஈரமிலா நெஞ்சத்தார்க்கு ஈந்த உபகாரம்
நீர்மேல் எழுத்துக்கு நேர்.

### 3. நல்லோர் உறவு நலம் தரும்

நல்லாரைக் காண்பதுவும் நன்றே; நலமிக்க
நல்லார் சொல் கேட்பதுவும் நன்றே;-நல்லார்
குணங்கள் உரைப்பதுவும் நன்றே; அவரோடு
இணங்கி இருப்பதுவும் நன்று.

### 4. மன்னனை விடக்கற்றவனே மேலானவன்

மன்னனும் மாசறக்கற்றோனும் சீர்தூக்கின்
மன்னனிற் கற்றோன் சிறப்புடையன்-மன்
[னற்குத்

தன்தேசம் அல்லால் சிறப்பில்லை கற்றோர்க்குச்
சென்ற இடம் எல்லாம் சிறப்பு.

### 5. மேன்மக்கள் தன்மை

அட்டாலும் பால் சுவையில் குன்றாது; [அளவளாய்
நட்டாலும் நண்பல்லார் நண்பல்லர்;
கெட்டாலும் மேன்மக்கள் மேன்மக்களே;
சுட்டாலும் வெண்மை தரும். [சங்கு

—ஔவையார்

### 5. நன்னெறி

1. நீக்கம் அறும்இருவர் நீங்கிப் புணர்ந்தாலும்
நோக்கின் அவர் பெருமை நொய்தாகும்;—பூக்குழ
நெல்லின் உமிசிறிது நீங்கிப் பழமைபோல் [லாய்!
புல்லினும் திண்மைநிலை போம். [ஏனையவர்

2. மாசற்ற நெஞ்சு உடையார் வன்சொல் இனிது
பேசுற்ற இன்சொல் பிறிது என்க;—ஈசற்கு
நல்லோன் எறிசிலையோ நன்னுதால்! ஒண்கருப்பு
வில்லோன் மலரோ விருப்பு ?

3. பிறர்க்குஉதவி செய்யார் பெரும்செல்வம், வேறு
பிறர்க்குஉதவி ஆக்குபவர் பேறும்;--பிறர்க்குஉதவி
செய்யாக் கருங்கடல்நீர் சென்று புயல்முகந்து
பொய்யாக் கொடுக்கும் பிறர்க்கு.

4. என்றும் முகமன் இயம்பா தவர்கண்ணும்
சென்று பொருள்கொடுப்பர் தீதுஅற்றோர்;—
[துன்றுசுவை

பூவிற் பொலிகுழலாய்! பூங்கை புகழவோ
நாவிற்கு உதவும் நயந்து.

5. இன்சொலால் அன்றி இருநீர் வியன்உலகம்
வன்சொலால் என்றும் மகிழாதே;—பொன்செய்
அதிர்வளையாய்! பொங்காது அழல்கதிரால்; தண்
கதிர்வரவால் பொங்கும் கடல். [என்

—சிவப்பிரகாசர்

## 6. நல்வழி

### 1. அறம்செய்வோர் பெரியோர்

சாதி இரண்டொழிய வேறில்லை; சாற்றுங்கால்
நீதி வழுவா நெறிமுறையின்—மேதினியில்
இட்டார் பெரியோர் இடாதார் இழிகுலத்தோர்
பட்டாங்கில் உள்ளபடி.

### 2. நல்லோர் தன்மை

ஆற்றுப் பெருக்கற்று அடிசுடும்அந் நாளும்அவ் [வாறு
ஊற்றுப் பெருக்கால் உலகூட்டும்;—ஏற்றவர்க்கு
நல்ல குடிப்பிறந்தார் நல்கூர்ந்தார் ஆனாலும்
இல்லைஎன மாட்டார் இசைந்து.

### 3. ஈசன் செயல்

ஒன்றை நினைக்கின் அது ஒழிந்திட்டு ஒன்றாகும்
அன்றி அதுவரினும் வந்தெய்தும்;—ஒன்றை
நினையாத முன்வந்து நிற்பினும் நிற்கும்;
எனையாளும் ஈசன் செயல்.

### 4. வரவுக்கு மேல் செலவு கூடாது

ஆன முதலில் அதிகம் செலவானுல்
மானம் அழிந்து மதிகெட்டுப்–போனதிசை
எல்லார்க்கும் கள்ளனுய் ஏழ்பிறப்பும் தீயனுய்
நல்லார்க்கும் பொல்லனும் நாடு.

### 5. கருமியாக இருக்காதே

பாடுபட்டுத்தேடிப்பணத்தைப் புதைத்து வைத்துக்
கேடுகெட்ட மானிடரே கேளுங்கள்;—கூடு விட்டு
[இங்கு
ஆவிதான் போயினபின்பு யாரே அனுபவிப்பார்
பாவிகாள் அந்தப் பணம்.

—ஔவையார்

## 7. சுதந்திரத் திருநாள்

1. இந்திய நாட்டின் சுதந்தரத் திருநாள்
இன்பம் யாவையும் இனிமேல் தருநாள்;
செந்தமிழ்த் தாயின் திருப்புகழ் பாடித்
தெய்வம் தொழுவோம் யாவரும் கூடி.

2. அன்பின் ஆண்மையும் ஆற்றலும் வளரும்
அன்னை பாரதத் தாய்மனம் குளிரும்;
துன்பம் யாவையும் தொலைத்திட முடியும்
சோற்றுத் தரித்திர மாவது விடியும்.

3. எல்லாத் தேசமும் எமக்கினி உறவாம்
எவரும் செய்திடும் நன்றியை மறவோம்;
நல்லார் யாரையும் நலமுறக் காப்போம்
நலிப்பவர்யாவரும்நடுங்கிடப்பார்ப்போம்.

4. சுதந்தரம் சுதந்தரம் சுதந்தரம் ஒன்றே
சுகந்தரும் சுகந்தரும் சுகந்தரும் என்றும் ;
பதந்தரும் பலந்தரும் பரமனைக் காணும்
பக்தியென் பவருக்கும் சுதந்தரம்வேணும்.

—நாமக்கல் கவிஞர்

1. அரும்பொருள் :-

1. தமிழ் மொழி வாழ்த்து: *1.* நிரந்தரம் - என்றென்றும். வண்மொழி - வளமை மிக்க மொழி. இசை- புகழ்.

2. நறுந்தொகை :-

*1.* தேம்படு—இனிமை பொருந்திய
*2.* வான்உற—ஆகாயத்தை அளாவி
*4.* தெள்ளிய—தெள்ளி எடுத்த
*5.* தெண்ணீர்—தெள் + நீர்—தெளிந்த நீர்
கயம்—குளம்
*6.* நுண்ணிதே—சிறியதே
அண்ணல்—பெருமை பொருந்திய
*7.* அணி—அழகு ; புரவி—குதிரை.

3. வெற்றி வேற்கை :

*1.* கற்கை—படித்தல்.
*3.* குலநலம்—குலத்தின் பெருமை.

4. மூதுரை :

*1.* என்று தரும் - எப்பொழுது பயன் அளிக்கும். தளரா - சோர்வு இல்லாமல். தாள்—பாதம்.
*2.* ஈரமில்லா—அன்பு இல்லாத. ஈந்த—செய்த. நேர்—சமம் ஆகும்.
*3.* இணங்கி - ஒன்று சேர்ந்து.

4. மாசற - குற்றம் நீங்க. சீர் தூக்கின் - ஆராய்ந் தால்.
5. சுட்டாலும் - நன்ருகக் காய்ச்சினுலும். அள வளாய் - மிகவும் நெருங்கி. நட்டாலும் - சிநே கித்தாலும்.

5. நன்னெறி :
1. நீக்கம் அறும் - வேற்றுமை இல்லாத. நொய்து- அற்பம். புல்லினும் - ஒன்று சேர்ந்தாலும். திண்மை - வலிமை.
2. வன்சொல் - கடுமையான சொல். பிறிது - கொடியது. எறிசிலை - வீசி எறிந்த கல். ஒண் கருப்பு - ஒள் + கருப்பு - ஒளி பொருந்திய கருப்பு.
3. வேறு - பிறிதேயானுலும். ஆக்குபவர்- செய்கிறவருடைய. பேரும் - செல்வமாகும். புயல் - மேகம். முகந்து-மொண்டு.
4. முகமன் - உபசார வார்த்தை. துன்று - அதிக மாக. நயந்து - அன்பு கொண்டு.
5. இருநீர் - பெரிய கடலினுல் சூழப்பட்ட. வியன் - பெரிய. அழல் கதிர் - சூரியன். தண்:- குளிர்ச்சி. தண்என் கதிர் - சந்திரன்.

6. நல்வழி :
1. சாற்றுங்கால் - சொல்லுமிடத்து. பட்டாங்கில்- சாத்திரங்களில்.
2. நல்கூர்ந்தார் - தரித்திரர். இசைந்து - மனம் ஒப்பி.
3. எய்தும் - சேரும்.

7. சுதந்திரத் திருநாள் : 3. நலிப்பவர் - துன்பம் செய் பவர்.

# 24. நாட்டு வணக்கம்

1. நம் நாடு செழிக்கவேண்டும் ;
   நாம் எல்லாம் களிக்க வேண்டும் ;
தம் நாடு மட்டும் வாழப்
   பிறர் நாட்டைத் தவிக்கச் செய்யும்
வெம் நாடுகளுக்கு எல்லாம், ஓர்
   விழுமிய ஞானமார்க்கம்
எம் நாடு உதவிற்று, என்று
   இந்தியன் மகிழவேண்டும்.

2. தாழ்வுகள் யாவும் போகத்
   தரித்திரக் கொடுமை நீங்கிச்
சூழ்கடல் உலகில் மக்கள்
   சுதந்தரத்துடனே வாழ்ந்து,
ஆழ்கலை அறிவும் ஓங்கி,
   ஆண்டவன் அன்பைக் கண்டு,
வாழ்ந்திட வேண்டும் என்றே
   நம் நாடு வாழவேண்டும்.

—நாமக்கல் கவிஞர்

அரும்பொருள் :

வெம்நாடு—கொடிய நாடு.

விழுமிய—மேலான

ஆழ்கலை—ஆழ்ந்த கருத்துகள் அடங்கிய கலை.

03, 03/1, 6(4) N50
13985 ... 008.

RTR
818

# குடியரசு தமிழ் வாசகம்

## நான்காம் புத்தகம்

நான்காம் வகுப்புக்குரியது

வீ. கி. சேஷாத்திரி, பீ. ஏ., எல். டி., எழுதியது.

டி. வி. செல்லப்ப சாஸ்திரி அண்டு ஸன்ஸ்

சென்னை-1.

காபிரைட்]

[விலை அணா 10.